Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
☞ விரைவானது ☞ பாதுகாப்பானது ☞ நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Violag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836
பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310
E.mail:thirumurugan5@lycosmail.com

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 28 (14.09.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:347

## முகமாலை, ஓமந்தை சோதனைச்சாவடிகளை இரவு ஏழு மணிவரை திறப்பதற்கு நடவடிக்கை!

### ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கூறுகிறார்


அரச அதிபருடன் ஹரீம் பீரிஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கான போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக முகமாலை மற்றும் புளியங்குளம் பகுதிகளிலுள்ள படையினரின் சோதனைச்சாவடிகளை மாலை 7 மணிவரை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி சந்திரிகாவின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், யாழ். செயலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹரீம் பீரிஸ் இன்று வன்னி செல்கிறார்!

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் இன்று வன்னிக்குச் சென்று அங்கு முன்னெடுக்கவேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து ஆராயவுள்ளார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்.குடாநாட்டுக்கு வந்திருந்த ஹரீம் பீரிஸ், யாழ்.அரச அதிபரைச் சந்தித்து குடாநாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்ந்தார்.

இன்று காலை வன்னிக்குச் சென்று அங்கு முன்னெடுக்கப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகள் குறித்து இவர் ஆராயவுள்ளார்.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் புனர்வாழ்வு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித்திட்டங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளார். அங்கு மேற்கொள்ளவேண்டிய அவசர மனிதாபிமான உதவிகள் குறித்தும் மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமாருடனும் ஹரீம் பீரிஸ் கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகிறது.

## நல்லைக் கந்தன் தேர்த்திருவிழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள்!



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் தேர்த்திருவிழா நேற்று லட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ சிறப்பாக நடந்தேறியது.

நேற்று அதிகாலை 4.30 மணிமுதல் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று, பக்தர்களின் 'அரோஹரா' ஒலி வானைப் பிளக்க, காலை 7.30 மணியளவில் ஆறுமுகசுவாமி சித்திரத்தேரில் வீதியுலா வந்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளை மேற்கொள்ள எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வருகை!



### ஐந்து நாட்கள் தங்கியிருப்பார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் – இடைநிறுத்தப்பட்ட நிலையில் உள்ள சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான

## இலங்கைப் படைகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கும்!



# ஐந்து நாட்கள் தங்கியிருப்பார்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் – இடைநிறுத்தப்பட்ட நிலையில் உள்ள சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும் நோக்கில் –**

**ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றிரவு கொழும்பு வந்து சேர்ந்தார்.**

நேற்றிரவு 8.45 மணியளவில் கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்த எரிக் சொல்ஹெய்ம், இன்று சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான பேச்சுக்களில் ஈடுபடுவார் எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ள எரிக் சொல்ஹெய்ம், நாளைமறுதினம் கிளிநொச் சிக்கு விஜயம்செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப் பேசுவார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி நாடு திரும்பவிருக்கும் சொல்ஹெய்ம், அதற்கிடையில் ஜே.வி.பியினரையும் சந்தித்துப் பேச்சு நடத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் படைகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கும்!

## அட்மிரல் அருண்பிரகாஷ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் கடற்படை மற்றும் படையினருக்கு - இந்தியக் கடற்படை முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று, இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் உறுதியளித்துள்ளார்.

ஐந்து நாள் விஜயமாக இலங்கை வந்துள்ள இந்தியக் கடற்படைத் தளபதி நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)



தயா சந்தகிரியுடன் அட்மிரல் அருண் பிரகாஷ்

## 13 மணிநேர முயற்சியின் பின்னர்

# கிணற்றுக் குழியில் புதைந்த தொழிலாளியின் சடலம் மீட்பு!

(அச்சுவேலி)

ஆழமாக வெட்டப்பட்ட கிடங்கின் அடியில் நின்று குழாய்க்கிணறு அமைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை - திடீரென மண்சரிவு ஏற்பட்டதில் புதையுண்ட தொழிலாளியின் சடலம் நேற்று அதிகாலை அந்தப் பகுதி மக்களினதும், பொலிஸாரினதும் அயராத முயற்சியால் சுமார் 13 மணி நேரத்தின் பின்னர் மீட்கப்பட்டது.

அச்சுவேலிப் பகுதியில் குழாய்க்கிணறு அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது நேற்றுமுன்தினம் நண்பகல் ஏற்பட்ட மண்சரிவில் ஐந்து பிள்ளைகளின் தந்தையான புத்தூரைச் சேர்ந்த சபாரத்தினம் ரத்னாநந்தம் (வயது 38) என்பவரே குழியில் புதையுண்டு இறந்தவராவார்.

அவரது சடலத்தை மீட்கும் பணி நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவை உணர்வுடன் அனுஷ்டிக்க அறைகூவல்!

தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்காக தன்னை அணுஅணுவாக அழித்து, தனது இன்னுயிரை அர்ப்பணித்த மாவீரன் தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு நாட்களை மிக உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை அறைகூவல் விடுத்துள்ளது.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் திலீபனின் சாவு, காலத்துக்குக் காலம் பெரும் விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்க அவனது ஆன்மா இன்னமும் ..மது விடுதலைக்கு உரம்சேர்த்துக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு ஆன்மாவும் இன்று பேசுவது அமைதி, சமாதானம், சுதந்திரம், மகிழ்ச்சி, நிம்மதியான வாழ்வு என்பது பற்றியதுதான். இவற்றைப் பெறவேண்டுமானால் திலீபன் சொன்னதுபோல் 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திர தமிழீழம் மலரட்டும்'. என மக்கள் போராடுவது இன்று தவிர்க்கமுடியாத ஒன்றாகி விட்டது.

தியாகி திலீபன் உண்ணா நோன்பு தொடங்கிய செப்ரெம்பர் 15 ஆம் திகதியான நாளை காலை 9.55 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டு 26 ஆம் திகதி வரை நடைபெறும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கிச் சங்கத்துக்கான புதிய கட்டடம் நிறுவப்படவுள்ளது.

இதற்கு வேண்டிய நிதியினை சமுர்த்தி அதிகாரசபை வழங்கியுள்ளது.எனவும் அந்த நிதியைக் கொண்டு அராலி மத்தியில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகவும், இதற்கான அடிக்கல் கடந்த வெள்ளிக்கிழமை நடப்பட்டதாகவும் யாழ்.செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கு.ஞானசேகரம் தெரிவித்தார்.

## தென்பகுதிப் பத்திரிகையாளர் உள்ளூர் பிரமுகர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் புதன்கிழமை தென்பகுதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் குழு ஒன்று யாழ். குடாநாட்டுப் பத்திரிகையாளர்களையும், உள்ளூர் பிரமுகர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளது.

இந்தச் சந்திப்பு நாளை மாலை 4.00 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

## சிறு விளம்பரம்

### Spoken English

மிகக்குறுகிய காலத்துக்குள் எளிதில் ஆங்கிலம் பேசக்கூடிய வகையில் மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், வெளிநாடு செல்பவர்களுக்கும் செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் காலை 7 - 8 வரை கற்பிக்கப்படுகிறது. மு.சோமசுந்தரம், சந்தை ஒழுங்கை , அம்மன் வீதிச்சந்தி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (930)

ஆட்டாமா, வறுத்தமா, சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, கோதுமை குறுணல் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில் அன்ஸ்ரோர்ஸ், இல 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3022)

## மீளக்குடியமர்வு நிதியான

# இருபத்தையாயிரம் பெற்றவர்களுக்கும் ஏப்ரல் மாத நிவாரணம் வழங்கப்படும்!

இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் பெற்றுவந்த அனைவருக்கும் ஏப்ரல் மாத நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செயயப்பட்டு வருவதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் - வன்னியில் இருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வந்து, 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவினை பெற்றுக்கொண்டவர்களுக்கு நிவாரணம் வழங்கலில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

இருப்பினும், அந்தத் திட்டங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் இந்தமுறை 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெற்றவர்களும், ஏப்ரல் மாத உலருணவு நிவாரணத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்னும் சில நாட்களில் ஏப்ரல் மாத உலர் உணவு நிவாரணத்தினை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

## பத்தாயிரம் ரூபா பணம் உரியவரிடம் ஒப்படைப்பு!

நல்லூர் ஆலயத் தேர்த் திருவிழாவான நேற்றுக் காலை 10 ஆயிரம் ரூபா பணத்துடன் கூடிய பேஸ் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து அளவெட்டி அளகொல்லை பிள்ளையார் ஆலயத்தில் சிற்பவேலையில் ஈடுபட்டிருக்கும் வீரையன் கதிரவேலு என்பவரே ஆலயத்தின் மேற்கு வீதி யில் இதனைக்கண்டெடுத்து நல்லூர் உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைத்தார்.

பின்னர் - இதனை நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் விடுதலைப் புலிகளின் யாழ். நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் இந்தப்பணத்தின் உரிமையாளரான சுப்பையா பாலச்சந்திரன் என்பவரிடம் ஒப்படைத்தனர்.

## கணினி ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி

யாழ்.மாவட்டத்தில் கணினிக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 5 தொகுதியினருக்கான விசேட பயிற்சி இன்று காலை 8.30 மணிக்கு ஆரம் பமாகவுள்ளது. இந்தப்பயிற்சி நெறி 14 நாட்களைக் கொண்ட பயிற்சி நெறியாக அமைந்துள்ளது. மேற்படி பயிற்சி நெறியில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.


நாகம்ஸ் சுன்னாகம்




தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

மதுர

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்



(ச-2725)

நிறஞ்சனாஸ் சங்கானை



ரஜினி, நக்மா ரகுவரன் நடித்த

பாட்ஷா

காட்சி நேரம்: 11.00.2.45. 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

Return to two moon junction

(ச-2723)


## நல்லூர் ஆலய தேர்த்திருவிழா காட்சி






6 மாதம் யாழ்ப்பாணத்தில் M.M.I.C 20 % கழிவு

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைசார் தபால்மூலம் கற்கைநெறி

Diploma in Massemedia

Dip.in.m.m.(Sri lanka) சான்றிதழ்

இல.15, சிறாம்பியடி லேன்,மணியம் பில்டிங், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Call: 0777316258


ஓம்

ஸ்ரீராம ஜெயம்

# யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# தாரண வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

## நாராயணன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம், ஆவணித்திங்கள் 30 ஆம் நாள் (15.09.2004) ஸ்ரீமந் வேங்கடேச வரதராஜப் பெருமாளின் திவ்விய மகோற்சவத் தொடர் காலை 10.15 இக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக, பகவான் திருவருள் பாலித்துள்ளார். அடியார்கள் அனைவரும் தொடர்ந்து வரும் மகோற்சவங்களுக்கு ஆசார சீலராக வந்து எம் பெருமானைத் தரிசித்து, லக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

15.09.2004 காலை 10.15 கொடியேற்றம் - சூரிய பரிதிச் சேவை மாலை 5.15 அன்னச்சேவை<br>
2 ஆம் உற்சவம் 16.09.2004 காலை 10.15 கேடகம் - மாலை 5.15 ஷேஷ சயன சேவை<br>
3 ஆம் உற்சவம் 17.09.2004 காலை 10.15 கேடகம் - மாலை 5.15 கருடசேவை<br>
4 ஆம் உற்சவம் 18.09.2004 காலை 10.15 கருடசேவை - மாலை 5.15 அநுமசேவை<br>
(1 ஆவது புரட்டாதிச்சனி)<br>
5 ஆம் உற்சவம் 19.09.2004 காலை 10.15 கேடகம் - மாலை 5.15 பூத்தண்டிகைச் சேவை<br>
6 ஆம் உற்சவம் 20.09.2004 காலை 10.15 கேடகம் - மாலை 5.15 கஜேந்திர சேவை<br>
7 ஆம் உற்சவம் 21.09.2004 காலை 10.15 கேடகம் - மாலை 5.15 சப்பறம் -வெண்ணெய் தாளி சேவை<br>
8 ஆம் உற்சவம் 22.09.2004 காலை 10.15 கருடசேவை - மாலை 5.15 வருட சேவை<br>
9 ஆம் உற்சவம் 23.09.2004 காலை 8.30 - வசந்தமண்டபபூசை, 10.30 இரதோற்சவம் } - மாலை 5.15 கருடசேவை<br>
10 ஆம் உற்சவம் 24.09.2004 காலை 8.00 வசந்தமண்டபபூசை, 9.30 தீர்த்தோற்சவம் } - மாலை 5.15 கொடியிறக்கம் சந்திரப்பிறைச்சேவை<br>
25.09.2004 காலை 10.15 கருடசேவை - மாலை 5.15 திருக்கல்யாணம் பூத்தண்டிகைச் சேவை<br>
(2 ஆவது புரட்டாதிச் சனி)<br>
26.09.2004 மாலை 5.15 திருவூஞ்சல் பூந்தண்டிச்சேவை<br>
27.09.2004 மாலை 5.15 வதிரிவிருட்ச யோக நாராயண உற்சவம்<br>
29.09.2004 காலை பிராயச்சித்த அபிசேகம் - மாலை 5.15 ஆஞ்சநேயர் அபிசேகம் பொங்கல் உற்சவம்



(ச/3108)

ஆதீன மகா சபை

# இ.தொ.கா அரசாங்கத்துடன் இணைவு; மலையக மக்கள் மத்தியில் அதிருப்தி!

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைந்துகொண்டமை தொடர்பாக பெரும்பாலான மலையக மக்கள் மத்தியில் அதிருப்தி தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்த மக்களின் நலன்களைப் புறக்கணித்து, தமது சொந்த நலன்களை முதன்மைப்படுத்தி தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டிருப்பதாக அக்கட்சியின் இந்த நடவடிக்கை தொடர்பாகக் கடுமையான விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஊடகங்கள் பலவற்றிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை விமர்சிக்கும் கட்டுரைகளும், ஆசிரியர் தலையங்கங்களும் தீட்டப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பான கண்டனக் கட்டுரையொன்றை வெளியிட்டுள்ள தமிழ் பத்திரிகையொன்று, அரசுடன் இணைவதற்கான முடிவை அறிவிப்பதற்கான செய்தியாளர் மாநாட்டை நடாத்திய ட்ரான்ஸ் ஏசியாக உல்லாச விடுதியின் கட்டணம் கூட, ஏழைத் தொழிலாளரின் உழைப்பிலிருந்து பெறப்பட்ட பணம் என்று கடுமையான தொனியில் விமர்சித்திருக்கிறது.

இதேவேளை, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை இலங்கைத் தொழிலாளர் கங்கிரஸ் பொறுப்பேற்றதும், அமைச்சின் செயலாளராக இருந்த இராமானுஜம் அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறுவர்களின் கைதைத் தடுக்கவும்

## யுனிசெப் வேண்டுகோள்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறுவர்கள் கைதுசெய்யப்படும் சூழ்நிலையை தவிர்த்துக்கொள்ளுமாறு அரசாங்கத்திடம் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வளர்ந்தவர்களால் ஒருங்கிணைக்கப்படும் வன்முறைகளில் அறியாமையின் காரணமாகவே சிறுவர்கள் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள சிறுவர் நிதியத்தின் பேச்சாளர் கொவ்ரி கீல் -

பயங்கரவாதத் தடைச் சட்டத்திலிருந்து சிறுவர்களுக்கு விலக்களிக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அரசாங்கத்துக்கு தாம் உத்தியோகபூர்வமான கோரிக்கையினை விடுக்கவில்லை எனவும் தெரிவித்த அவர், இலங்கையில் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக ஏனைய தொண்டு நிறுவனங்கள் விடுக்கும் அழைப்புக்கு தாம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

# தொண்டமானின் பாதுகாப்பு அரசாங்கத்தால் அதிகரிப்பு!



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்துக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளிப்பதையிட்டு, அந்தக் கட்சியின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கான பாதுகாப்பு அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தொண்டமானின் வாகனத்திற்குப் பாதுகாப்பாக இரண்டு வாகனங்களில் 15 இராணுவ கொமாண்டோக்களும், அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 20 பேரும், விமானப்படையைச் சேர்ந்த 6 பேருமாக அதிகரித்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆறுமுகன் தொண்டமானின் வாசஸ்தலத்திற்கும் மேலதிகமாக சிறப்பு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின் பேரிலேயே இந்தப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் நாடாளுமன்றம் கூடுவதற்கு முதல்நாள் ஐக்கிய தேசியக் கட்சியின் சபாநாயகர் வேட்பாளரான டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாரவிற்கு ஆதரவு கோரி ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆறுமுகன் தொண்டமான் பேச்சுவார்த்தை நடத்தியதனால் அவருக்கு வழங்கப்பட்ட விமானப் படையினரின் பாதுகாப்பு விலக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# திருமலை நீதிமன்ற கட்டட திறப்புவிழாவில் சிங்கக்கொடி ஏற்றாததால் ஜே.வி.பி விசனம்



(கொழும்பு)

இலங்கைத் தேசியக் கொடி ஏற்றப்படாமல் நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்ட மேல்நீதிமன்றக் கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் சுமார் 7 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய மேல்நீதிமன்றக் கட்டடம் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கையின் தேசியக் கொடி ஏற்றப்படவில்லை.

இதனை அவதானித்த ஜே.வி.பி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகர தான் கொண்டு வந்த தேசியக்கொடியைக் கம்பமொன்றை நட்டு ஏற்றியதுடன், அவருடன் வந்த சிலர் அதற்குப் பாதுகாப்பாகவும் நின்றனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்றபோது அவருக்கு உரிய மரியாதை வழங்கப்படாததையும், தனக்கு இருப்பிடம் போடப்படாததையும் ஆட்சேபித்து இந்த நிகழ்வில் கலந்துகொள்ளாது மண்டபத்திலிருந்து வெளியேறினார்.

இவரைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்திலுள்ள உதவி அரச அதிபர்கள் மற்றும் பிரதேச செயலர்களும் அங்கிருந்து சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் நீதியமைச்சின் செயலாளர் சுகத் கம்லத், ஜனாதிபதி சட்டத்தரணி ஜனாவ் இக்ரம் மொகமட் மற்றும் வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த நீதிபதிகள், சட்டத்தரணிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10,4)

# தொழிலாளர் காங்கிரஸ் குறித்து ஜனாதிபதியிடம் முறைப்பாடு!

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்துகொண்ட பின்னர், நடந்துகொண்ட விதம் குறித்து ஜனாதிபதியிடம் முறையிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை முன்னாள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.பி.ரட்நாயக்க மற்றும் பிரதி அமைச்சர் சந்திரசேன ஆகியோர் செய்துள்ளனர்.

குறிப்பிட்ட இருவரும் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும் கடந்த வெள்ளிக்கிழமையன்று பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர், அன்று மாலையே அமைச்சகங்களுக்குச் சென்று தமது பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டனர்.

எனினும் அன்று அந்த நேரம் வரை முன்னாள் அமைச்சர்களான சி.பி.ரட்நாயக்கவுக்கும், பிரதி அமைச்சர் சந்திரசேனவுக்கும் தமது பொறுப்புக்களுக்கு வேறொருவர் நியமிக்கப்பட்டமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் புதிய அமைச்சரும், பிரதி அமைச்சரும் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட போது முறைப்படி நடந்துகொள்ளவில்லை.

இது குறித்து அரச தரப்பினர் தெரிவிக்கையில் - விடயம் ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டபோதும், அவரின் செயலகம் அதனை நடைமுறைப்படுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# 'ஹொலிவூட் புத்தர்' தடைசெய்யுமாறு கொழும்பில் நேற்றும் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி வெளியிடப்படவுள்ள 'ஹொலிவூட் புத்தர்' என்ற திரைப்படத்தைத் தடைசெய்யுமாறு வலியுறுத்தி நேற்றும் கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

கொழும்பு பம்பலப்பிட்டியில் இருந்து ஊர்வலமாக அமெரிக்க தூதரகத்துக்குச் சென்ற தேசிய சங்க சபையின் பௌத்த பிக்குமார் - அது தொடர்பாக அங்கு மனுவொன்றையும் கையளித்தனர்.

இது தொடர்பான ஆர்ப்பாட்டமொன்று நேற்றுமுன்தினமும் கொழும்பில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதியை சந்திக்க சந்திரிகா எடுத்த முயற்சி தோல்வி

(கொழும்பு)

அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி சந்திரிகா அந்த நாட்டு ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை சந்திப்பதற்கு மேற்கொண்ட முயற்சி கைகூடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட கூட்டத் தொடர் ஒன்றில் கலந்து கொள்வதற்காக அடுத்த வாரம் அமெரிக்கா செல்லவுள்ள ஜனாதிபதி, இந்த விஜயத்தின் போதே ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை சந்திக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் -

ஜனாதிபதிக்கான இந்தப் பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர், அமெரிக்க ஜனாதிபதியுடனான சந்திப்புக்கும் ஏற்பாடு செய்ய முயற்சித்த போதும், ஜோர்ஜ் புஷ் இதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



அடுத்தவாரம் நியூயோர்க் நகரில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை விசேட அமர்வில், ஜோர்ஜ் புஷ்ஷும் கலந்து கொள்ளவுள்ள போதும், ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திப்பதற்கு தமக்கு நேரமில்லை என்று தெரிவித்தே, இந்த ஏற்பாட்டுக்கு அவர் மறுப்புத் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எழுதுவினைஞர் பதவிகளுக்கு 25 முதல் நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

அரசாங்க சேவையில் எழுதுவினைஞர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 9 ஆம் திகதி வரை நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

மொத்தமாக 2806 எழுதுவினைஞர்கள் அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இதில் மூன்று வீதம் விசேட தேவைக்குரியவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## தேர் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தசுவாமி கோவிலுக்கு 2 ஆம் திருவிழா உபயகாரர்கள் உள்வீதி சுற்றுவதற்காக சிறிய தேர் ஒன்றைச் செய்து அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்தத் தேர் வெள்ளிக்கிழமைகளில் சுவாமி வலம் வருவதற்குப் பயன்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (14)

# அடிப்படை மனித உரிமைகளை மக்கள் இலகுவாக பெறவேண்டும்

## பிரதம நீதியரசர்

நீதி நிர்வாகம் என்பது ஜனநாயக மற்றும் மனித அடிப்படை உரிமையாகும். இந்த உரிமையை மக்கள் தமக்கு அண்மையாகவும், இலகுவாகவும் பெற்றுக்கொள்ளவேண்டும். எனினும் இத்தகைய உரிமையைப் பெறுவதில் இதுவரை காலமும் திருகோணமலை மாவட்ட மக்களுக்கு பெரும் சிரமங்கள் இருந்து வந்தது என்று, கடந்த ஞாயிறன்று திருகோணமலையில் நீதிமன்றக் கட்டடத்தை திறந்துவைத்த பின் உரையாற்றிய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

திருகோணமலை மாவட்ட மக்கள் மிக நீண்ட தூரத்திற்கு சென்றும், அதிக செலவு செய்தும், பலத்த சிரமங்களுக்கு மத்தியில் தமது நீதி நிர்வாகத் தேவைகளை நிறைவேற்றுகின்றனர்.

இத்தகைய நிலைமையைப் போக்கி அவர்களின் சிரமங்களைக் குறைப்பதனை மையமாகக் கொண்டு இன மோதல்களால் பாதிக்கப்பட்ட இந்த மாவட்டத்திற்கு புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை அமைக்க வேண்டும் என்ற முன்மொழிவை நாம் மேற்கொண்டோம்.

இதன் அடிப்படையில் உலக வங்கி எமக்கு இந்த நிர்மாணத்திற்கென 78 மில்லியன் ரூபா நிதியுதவியாக வழங்கியது.

அந்த நிதியைக் கொண்டு இந்த அழகிய கட்டடத் தொகுதியை உங்களுக்கு வழங்கமுடிந்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்.

## ஒலிபெருக்கி சத்தத்தால் மாணவர்கள் பாதிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தம்பசிட்டியில் உள்ள ஆலயமொன்றில் காலை வேளைகளில் ஒலிபெருக்கியைக் கூடிய சத்தத்துடன் நீண்ட நேரம் ஒலிக்க விடுவதால், இந்தப் பகுதி மாணவர்களின் கல்விச் செயற்பாடு பாதிப்படைகிறது.

தம்பசிட்டியிலுள்ள ஆலயமொன்றில் ஒலிபெருக்கியை காலையில் அலறும் சத்தத்துடன் ஒலிக்கவிடுவதால் இப்பகுதி மாணவர்கள், தனியார் கல்வி நிறுவனங்களில் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைவதாக மாணவர் ஒருவர் தெரிவித்தார். (14)

# அவுஸ்ரேலியா 9 விக்கெட்டுக்களால் அமெரிக்காவை இலகுவாக வென்றது




இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் மினி உலகக் கிண்ணப் போட்டியில் நேற்று ரோஸ்பவுல் மைதானத்தில் நடைபெற்ற அவுஸ்ரேலிய - அமெரிக்க அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில், அவுஸ்ரேலியா 9 விக்கெட்டுக்களால் அமெரிக்காவை வெற்றிகொண்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலிய அணித் தலலவர் ரிக்கிபொண்டிங், முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். அதனால் அமெரிக்க அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணி சார்பாக அலெக்ஸாண்டர் மற்றும் ஜோன்சன் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர்.

இதில் ஜோன்சன் ஒரு பந்தைச் சந்தித்த நிலையில் பிரட்லீயின் பந்துவீச்சில் போல்டானார். அடுத்து ரொமேறோ ரன் அவுட் ஆனார். இவ்வாறு அமெரிக்க அணியின் விக்கெட்டுக்களை அவுஸ்ரேலியப் பந்து வீச்சாளர்கள் வீழ்த்திய வண்ணமிருந்தனர்.

இறுதியில் அந்த அணி 24 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 65 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் அவுஸ்ரேலியப் பந்து வீச்சாளர்கள் 14 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக்கொடுத்திருந்தனர்.

அமெரிக்க அணி சார்பில் மேஷையா என்பவர் மட்டும் கூடுதலாக 23 ஓட்டங்களைப் பெற்றார். மற்றய வீரர்களில் அலெக்ஸாண்டர், ஜோன்சன் ஆகிய இருவரும் தலா 8, 9 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய வீரர்கள் அனைவரும் இரண்டு ஓட்டங்களுக்கு மேல் பெறவில்லை. அதிலும் இரண்டு வீரர்கள் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் கஸ்பரோவிச் மற்றும் ஜிலெஸ்பி இருவரும் தலா நான்கு விக்கெட்டுக்களையும், பிரட்லீ, மக்ரா இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 66 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற மிகச் சிறிய இலக்குடன் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி - 7.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் ஹைடன் 17 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 23 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

கில்கிறிஸ்ட் 25 பந்துகளில் ஒரு சிக்ஸர் 3 பவுண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களையும், பொண்டிங் 8 பந்துகளில் ஒரு பவுண்டரியுடன் 8 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஹைடனின் விக்கெட்டை ஜோன்சன் கைப்பற்றினார். இதுவரை நடந்த மினி உலகக் கிண்ணப் போட்டியில் குறைந்த ஓட்டங்களில் அமெரிக்க அணியே தற்போது ஆட்டமிழந்துள்ளது.




**மினி உலகக் கிண்ணத்தில் இன்று நடைபெறும் ஆட்டம்**

**இலங்கை - சிம்பாப்வே (ஓவல்)**

**பாகிஸ்தான் - கென்யா (எட்ஜ்பாஸ்டன்)**

## ரெனிஸ் பெண்கள் தரவரிசையில்

# பிரான்ஸின் அமேலி மௌரெஸ்மோ முதல் நிலை வீராங்கனையாகிறார்

(பிரான்ஸ்)

வெல்லாமலேயே உலகின் முதல் நிலை வீராங்கனையாக உள்ளார் 25 வயதேயான பிரான்ஸின் அமேலி மௌரெஸ்மோ.

பெல்ஜிய வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் குறைந்த புள்ளிகள் வித்தியாசத்தில் தற்போது முதலிடத்திலிருந்து வருகிறார். அவருக்கும் அமெரிக்காவின் லின்ட்சே டேவன் போர்ட்டுக்கும் இடையே முதலிடத்துக்கான போட்டி நிலவிவந்தது.

ஆனால், வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமெரிக்க ஓபன் அரையிறுதியில் ரஷ்யாவின் சுவேட்லனா குநட்சேவிடம் தோற்றுப் போனதையடுத்து, முதலிடப் போட்டியில் டேவன்போர்ட்டுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இதையடுத்து, தரவரிசைப் பட்டியலில் மௌரெஸ்மோ முதலிடத்தைப் பிடிப்பார் எனத் தெரிகிறது.

முதலிடத்தைப் பெறப்போகும் மௌரெஸ்மோ இதுவரை ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் வென்றதில்லை. 1999 இல் நடைபெற்ற அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றதே அவரது அதிகபட்ச முன்னேற்றமாகவுள்ளது.



இந்தத் தொடரில் மௌரெஸ்மோ வெளிப்படுத்திய அபாரமான திறமைகளுக்குக் கிடைத்த வெகுமதியே இந்த முதலிடம் என, பிரான்ஸ் ரெனிஸ் சம்மேளனத் தலைவர் கிறிஸ்டியன் பிம்ஸ் தெரிவித்தார்.

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் இறுதிச் சுற்றில் ஜஸ்ரின் ஹெனினிடம் தோல்வியுற்று வெள்ளிப் பதக்கத்தை மௌரெஸ்மோ கைப்பற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

# ஷேவாக், யுவராஜ்சிங் இருவரின் ஆட்டமும் அடுத்த போட்டியில் சிறப்பாக இருக்கும்!

## கங்கூலி நம்பிக்கை

(கொன்யர்)

ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி இந்தியாவுக்குச் சவால் நிறைந்தது. இந்தியா இடம்பெற்ற பிரிவில் பாகிஸ்தான், கென்யா அணிகள் உள்ளன. இதில் பலவீனமான கென்யாவை இந்தியா எளிதில் தோற்கடித்திருந்தது.

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் ஆட்டத்தில் இந்திய அணி பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. இதில் வெற்றி பெற்றால்தான் இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி பெறமுடியும்.

இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களான வீரேந்தர் ஷேவாக், யுவராஜ் சிங் ஆகியோர் நெருக்கடியில் உள்ளனர். கென்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஷேவாக் 17 ஓட்டங்களும், யுவராஜ் சிங் 9 ஓட்டங்களும் எடுத்தனர்.

மோசமாக ஆடிவரும் ஷேவாக்கும், யுவராஜ்சிங்கும் இனிவரும் போட்டியில் சிறப்பாக ஆடுவார்கள் என்று கப்டன் கங்கூலி நம்பிக்கை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

துடுப்பாட்டத்தில் நான் லக்ஷ்மன், கைவ், டிராவிட் ஆகியோர் நல்ல நிலையிலுள்ளோம். மோசமாக ஆடும் ஷேவாக், யுவராஜ் ஆகியோர் விரைவில் துடுப்பாட்டத்தில் நல்ல நிலைக்குத் திரும்புவார்கள்.



பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் மோத கால அவகாசம் இருக்கிறது. வருகிற 19 ஆம் திகதி கடைசிப் போட்டியில் விளையாடுகிறோம். இந்தக் கடைசிப் போட்டியை இருவரும் சரியாகப் பயன்படுத்திகொண்டு ஓட்டங்கள் குவிப்பார்கள்.

இருவருமே சிறந்த துடுப்பாட்ட வீரர்கள். இருவரது ஆட்டத்தால் பல முறை அணிக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. ஷேவாக் மீது எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. எனக் கங்கூலி மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க ஓபன் ரெனிஸ்

# ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பெடரர் கிண்ணம் வென்றார்!



இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி நியூயோர்க்கில் நடந்தது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் - உலகின் முதன்நிலை வீரரான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) 4 ஆம் நிலைவீரரான லைடன் ஹெவிட (அவுஸ்ரேலியா) மோதினர்.

ரோஜர் பெடரரின் அபாரமான தாக்குதல் ஆட்டத்திற்கு ஈடு கொடுத்து விளையாடமுடியாமல், 2001 ஆம் ஆண்டு சம்பியனான ஹெவிட் திணறினார்.

பெடரர் 6:0,7:6 (7:3), 6:0 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று சம்பியன் பட்டம் பெற்றார். ஆட்டம் முழுவதும் பெடரரின் கையே ஓங்கியிருந்தது. 2 ஆவது செட்டில் மட்டுமே ஹெவிட் ஈடு கொடுத்து விளையாடினார்.

ரோஜர் பெடரர் கைப்பற்றிய 4 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும். 2003 ஆம் ஆண்டு விம்பிள்டனிலும், 2004 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியா ஓபனிலும் பட்டம் பெற்றிருந்தார். இந்த ஆண்டு அவர் கைப்பற்றிய 3 ஆவது பட்டம் இதுவாகும். பிரெஞ் ஓபன் தவிர மற்ற 3 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பட்டம் பெற்றுள்ளார்.

இதற்கு முன்பு 1988 ஆம் ஆண்டு மாட்ஸ் விலாண்டர் 3 கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்றிருந்தார். அமெரிக்க ஓபன் பட்டத்தைக் கைப்பற்றியதன் மூலம் உலகின் முதல் நிலைவீரர் என்பதை பெடரர் மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார்.

பெண்கள் இரட்டையர் இறுதிப் போட்டியில் விர்ஜினா (ஸ்பெயின்)- பவ்லா (ஆர்ஜென்ரீனா) ஜோடியுடன் ரஷ்யாவை சேர்ந்த எலீனா - சுவெட்லனா ஜோடி மோதியது.

இதில் விர்ஜினா - பவ்லா ஜோடி 6:4, 7:5என்ற நேர் செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டம் பெற்றது.

# மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் மரடோனா!

உயர் ரத்த அழுத்தம் காரணமாக ஆர்ஜென்ரீனாவின் கால்பந்து ஜாம்பவான் டியாகோ மரடோனா (வயது 43) கடந்த சனிக்கிழமை பியூனர்ஸ் அயர்ஸிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு முதல் நிலை சிகிச்சை அளிக்கப்பட்டதும் பியூனர்ஸ் அயர்ஸிற்கு மேற்கேயுள்ள போதை மருந்து புனர்வாழ்வு மையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இதயம் மற்றும் நுரையீரல் பிரச்சினை காரணமாக, இந்த ஆண்டின் தொடக்கத்தில் சாவின் விளிம்புக்கே சென்ற மரடோனா உயிர்பிழைத்தது குறிப்பிடத்தக்கது. 1986 இல் உலகக் கிண்ணத்தை ஆர்ஜென்ரீனா வென்றபோது அணியை வழிநடத்திச் சென்றவர் மரடோனா என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிய ரெனிஸ் இறுதிப் போட்டி; இந்திய வீராங்கனை தகுதி!

ரஷ்யாவில் நடைபெற்றுவரும் ஆசிய ரெனிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்திய வீராங்கனை சானியா மிர்ஜா இறுதிச் சுற்றுக்குத் தகுதிபெற்றிருக்கிறார்.

தாஸ்கண்டில் நடைபெற்ற இதன் அரையிறுதிப் போட்டியில் 7 ஆம் நிலை வீராங்கனையான சானியா 6:2, 6:4 என்ற செட் கணக்கில் தாய்லாந்தைச் சேர்ந்த 8 ஆம் நிலை வீராங்கனையான நபாபார்ன் டாங்சலேவை வீழ்த்தினார்.

இதன் இறுதிப் போட்டிக்கு மிர்ஜா தகுதி பெற்றதன் மூலம் அடுத்த வருட அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியில் விளையாடத் தகுதி பெறும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

# கென்ய அணியை தொடர்ந்தும் ஐ.சி.சி. புறக்கணித்து வருகின்றது

## கென்ய அணித்தலைவர் குற்றச்சாட்டு



கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் கென்ய அணி தனது திறமையை வெளிப்படுத்திய போதும் தமது அணியை ஐ.சி.சி புறக்கணிப்பதாக கென்ய அணித் தலைவர் ஸ்ரீவ் டிக்கலோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள டிக்கலோ - கென்ய அணி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் முன்னேற வேண்டுமானால், உலகின் பலம்வாய்ந்த அணிகளுடன் போட்டிகளில் விளையாட வேண்டும்.

ஆனால் உலகிலே கிரிக்கெட் விளையாட்டின் பாதுகாவலர்களாக விளங்கும் ஐ.சி.சி, கென்ய அணிக்குரிய அந்தஸ்தை வழங்கவில்லை. உலகிலுள்ள வேறு பல நாடுகளுக்கும் கிரிக்கெட் விளையாட்டை அறிமுகப்படுத்தப் போவதாகத் தெரிவிக்கும் ஐ.சி.சி, கென்ய அணியைப் புறக்கணித்தே வருகிறது. கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் நாம் சிம்பாப்வே அணியையும், இலங்கை அணியையும் வீழ்த்தி அரையிறுதிப் போட்டிககுத் தகுதி பெற்றோம். ஆனால் ஐ.சி.சி எமது அணியைத் தொடர்ந்தும் புறக்கணித்தே வருகிறது.

கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளின் பின் நாம் நீண்ட நாட்களாக சர்வதேசப் போட்டிகளில் விளையாடவில்லை. கடைசி நேரத்திலேயே சார்ஜாப் போட்டிகளுக்கு அழைக்கப்பட்டோம்.

இதனால், எமது அணி உரிய ஆயத்தங்கள் எதையும் மேற்கொள்ள முடியவில்லை.

இந்த வருடம் இடம்பெற்ற முத்தரப்புப் போட்டிகள் எவற்றிற்கும் எம்மை ஐ.சி.சி அழைக்கவில்லை. நாம் வெளிநாடுகளுக்குச் சென்று உலக அணிகளுடன் விளையாடுவதையும், உலகக் கிரிக்கெட் அணிகள் கென்யாவுக்கு வந்து போட்டிகளில் விளையாட வேண்டும் எனவும் விரும்புகிறோம்.

இதேசமயம், தற்பொழுது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மினி உலகக்கிண்ணப் போட்டிகளில் விளையாடுவதற்காக கென்ய அணியைத் தகுதிகாண் போட்டிக்கு உட்படுத்தியது தவறான ஒன்றாகும்.

ஏனெனில் கென்ய அணி ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதற்குரிய அந்தஸ்தை ஐ.சி.சி வழங்கியுள்ளது. பின்னர் எதற்காக கென்ய அணி தகுதி காண் போட்டிகளில் விளையாட வேண்டுமாயின், ஒருநாள் போட்டி அணி என ஐ.சி.சி வழங்கிய அந் தஸ்து பிரயோசனமற்றதாகும்.

ஐ.சி.சி எமது அணியை இவ்வாறு புறக்கணிப்பது தொடர்பாக நாம் மிகவும் கவலை அடைகின்றோம் எனத் தெரிவித்தார்.

## மீளக்குடியமர அனுமதிக்காமையால்
# பாடசாலைகளுக்கு ஒதுக்கிய நிதி வேறு இடங்களுக்கு மாற்றம்

வலி. வடக்கில் உயர் பாது காப்பு வலயத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாமையால், அந்தப் பகுதியிலுள்ள பாடசாலைகளின் அபி விருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ள தாக தெரியவருகின்றது.

இந்தப் பிரதேசத்தின் இரண் டாம் நிலை, கல்வி அமைச்சினால் பாடசாலைகளில் கட்புல, செவிப் புல, சாதன அறைகளை நிர்மா ணிக்கவென யாழ். குடாநாட்டில் 26 பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில உயர் வலய பகுதியினுள் அமை ந்துள்ள காங்கேசன்துறை நடேஸ் வரா கல்லூரி, வசாவிளான் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயப் பகு திகளில் அமைந்திருக்கிறது என காரணம் காட்டி, இந்தப் பாடசாலை களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே யுள்ள பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் மற்றும் சுதுமலை பாரதி வித்தியாலத்துக்கு மாற்றப் பட்டுள்ளதாக தெரியவருகிறது.

நாடளாவிய ரீதியில் 54 மத்திய மகா வித்தியாலயங்களில் மேற் கொள்ளவேண்டிய அவசரத்திட்டங் களுக்கென ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கென ஒதுக் கப்பட்ட நிதி, வேறு பாடசாலைக்கு மாற்றப்படலாம் என தெரிவிக்கப்படு கிறது. (17)

# உலருணவு மீளாய்வை கண்டித்து பிரதேச செயலருக்கு மகஜர்

யாழ். குமாநாட்டில் இடம்பெயர் ந்த மக்களுக்கான வழங்கப்பட்டு வரும் உலருணவு மீளாய்வு நட வடிக்கைகளைக் கண்டித்து வட மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெயர் ந்து வசிக்கும், பலாலி, மயிலிட்டி, நாகர் கோவில் பகுதிகளைச் சேர் ந்த மக்கள் மகஜர் ஒன்றை பருத் தித்துறை பிரதேச செயலர் எஸ். வந்தகுமாரிடம் கையளித்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று காலை 9 மணிக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக திரண்ட ஏராளமான மக்கள் இந்த மகஜ ரைக் கையளித்தனர்.

இதேவேளை அண்மையில், இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண மீளாய்வை இந்த மக்கள் பகிஸ்க ரித்தமை குறிப்பிடத்தக்கது. ஆனா லும், இந்த மீளாய்வு நடவடிக்கை தொடருமாயின் பாரிய அளவிலான சாத்வீகப் போராட்டங்களை முன்னெ டுக்கப் போவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (14)

# பாதீனியம் ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்க கோரிக்கை

(உடுவில்)

ஆக்கிரமிப்புக்களை எனப்படு கின்ற பாதீனியம், மழை பெய்ய ஆரம்பித்து விட்டதால் அதன் வளர்ச் சியும் அதிகரிக்கத் தொடங்கிவிட் டது.

கோடைகாலத்தில் உறக்க நிலையில் மண்ணுக்குள் காணப் படும் விதை, நீரினால் அற்றப்பட்டும் விலங்குகளின் கால்களில் ஒட்டிக் கொண்டும் சென்று இதற்கு முன் காணப்படாத புதிய புதிய இடங் களிலும் முளைக்க ஆரம்பித்துவிட் டது.

இந்தச் செடியின் வளர்ச்சியை தேசிய ரீதியாக கட்டுப்படுத்த வேண்டு மெனவும், அதற்காக பாதீனிய வாரம் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடாநாடு முழுவதும் மக்கள் ஒத்துழைப்புடன் இந்தச் செடியை அகற்ற பாதீனிய வாரம் கொண் டாட அரசாங்கத்திடம் அனுமதிபெற வேண்டுமெனவும், வலி. வடக்கு பிர தேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட் டுள்ளது. (101)

### நெற்செய்கைக்கான தயார்படுத்தல் பணிகள் ஆரம்பம்

(மட்டுவில்)

தற்போது பெய்துள்ள பருவம ழையை அடுத்து, மட்டுவில், சர சாலை, கல்வயல் பெருங்குளம் கற் குழிப்பகுதி மக்கள், காலபோக நெற் செய்கைக்கான தயார்படுத்தல்க ளில் ஈடுபட்டுள்ளனர்.

வயல்களை உழுது, குப்பை கூழங்களைப் பரவிப் பண்படுத்தி வருகின்றனர்.

மட்டுவில் பகுதியில் உள்ள குறிப்பிட்டளவு பகுதி வயல் நிலங் களில் மிதிவெடி அபாயமுள்ள காரணத்தால், அவற்றுக்கு உரிமை யான விவசாயிகள் மழைக்கால த்தை ஏக்கத்துடன் பார்த்திருப்ப தையும் காணமுடிகிறது. (24)

# நாட்டுப் பற்றும் சமயப் பற்றும் இருந்துவிட்டால் இளைஞர் சமுதாயத்தை அசைக்க முடியாது

## சிவ. மகாலிங்கம் தெரிவிப்பு

நாட்டுப்பற்றும், சமயப் பற்றும், கலை, கலாச்சாரப் பற்றும் இருந்து விட்டால், இளைஞர் சமுதாயத்தினரா கிய உங்களை யாருமே அசைக்க முடியாது என்று பர்மா நாட்டு மெய் யன்பர்களைப் பார்த்து, சுவாமி விவே கானந்தர் ஓர் அறைகூவல் விடுத் தார். "எ.்.கு போன்ற தசையும், இரு ம்பு போன்ற நரம்பும் கொண்ட இளை ஞர் சமுதாயம் தேவை" என்று. அப்படிப்பட்ட ஆற்றலுடைவர்கள், தளர்வறியா மன உறுதி கொண்ட வர்கள், தமது சமுதாயத்துக்குத் தேவை. இத்தகையவர்களை உரு வாக்குகின்ற பணியிலே இங்குள்ள சமய நிறுவனங்களும், சமுதாய அமைப்புக்களும் இணைந்து செய லாற்றுவது பெரும் மகிழ்ச்சியை தருவதாக உள்ளது எனறு, சங்கானை மாவடி இந்து இளைஞர், மகளிர் மன்றங்கள் இணைந்து அண்மையில் நடாத்திய 5ஆம் வருட கலைவிழா விலே பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய இந்து கலா சார அலுவல்கள் திணைக்களத் தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப் பாளர் சிவ. மகாலிங்கம் தெரிவித் தார்.

மேலும் அவர் தனதுரையில், இங்கே இருக்கின்ற வயது முதிர்ந்தவர்கள், பெற்றோர்கள் அனைவரும் அடுத்த சந்ததியினர் நல்ல ஆரோக்கிய முள்ள, நல்ல சிந்தனையுள்ளவர்க ளாக வாழவேண்டும் என்று பெரும் பணியாற்றி வருவதைக் கண்டு பூரிப்படைகின்றேன். ஓர்மனிதனுக்கு மூன்று பலங்கள் தேவை. ஒன்று உடற்பலம், மற்றொன்று மனோ பலம், இன்னொன்று ஆத்ம பலம். உடம்பு ஆரோக்கியமாக இருந்தால்தான் உலகிலே நாம் நல்ல பயனுள்ள செயற்பாடுகளைச் செய்ய முடியும். இதனால், இந்த உடம்பை யாவரும் பேண வேண்டும். இந்த உடற்பலம் என்பது, வெறுமனே உடற்பலமாக இருந்துவிட்டால், அது மிருக பல மாகவும் மாறிவிடும். மனிதனுக்கு உடற்பலம் அவசியம்போல மனோ பாலமும் அவசியமாகும். சிலரிடம் ஆற்றல் இருக்கிறது. எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளை யும் தாங்கி வாழும் மனிதன் இவற் றையெல்லாம் தாண்டி ஓர் காரிய த்தை செய்து முடிக்க நினைத்தால் அதனைச் செய்து முடிக்கின்றான்.

அதுதான் மனோபலம், இதையே அபிராமி பட்டர், "தளர்வடையா மனம் தேவை" என்று கூறுகிறார். இந்த இரண்டு பலமும் இருந்துவிட்டால் போதாது. ஒரு காரியத்தைச் செய் தால் அதனால் நாட்டுக்கும், மக்களு க்கும் பயன்படக்கூடியதாக செய்ய வேண்டும் என்றும் அவனுக்குள்ளே யிருந்து வழிகாட்டும் ஓர் தெய்வீக சக்தி தான் ஆத்மபலம். இவற்றைப் பெறுவதற்கான வழிகள் பல உள் ளன. அருள்ஞானிகள், அறநெறிப் பாடசாலைகள், சமய நிறுவனங்கள் எல்லாமே இதற்கான வழிவகைக ளைக் காட்டியுள்ளன.

இந்த வரிசையிலே சங்கானை யில் இப்படி ஓர் கலைவிழா நடப் பதையிட்டு பெரும் மனமகிழ்வு கொள் கிறேன். இளம் சமுதாயத்தினரால் இன்றைய காலகட்டதில் இப்படியும் சமயத்துக்கும், கலைக்கும் தொண்டு கள் செய்யமுடியுமா? என எண்ணி வியப்புறுகின்றேன். குறிப்பாக இளம் மகளிரின் செயற்பாடுகள் மெச் சத்தக்க வழியிலே இங்கு செயற் பட்டு வருவது நல்லதோர் எடுத்துக் காட்டாகும். ஒரு வீடும், நாடும் சிறப் பாக இருக்க வேண்டுமானால், அத ற்கு பெண்களின் வழிகாட்டலும் அவசியம். பெண்கள் கையிலே மகத் தான பொறுப்பு உள்ளதை அவர் கள் அறியவேண்டும். இவர்களுக்கு உற்ற துணையாக பெற்றோரும் ஏனையோரும் துணைபுரிந்து வந் தால், எமது எதிர்காலச் சந்ததி யினர் நல்ல ஆரோக்கியமுள்ளவர் களாக, நல்ல சிந்தனையுள்ளவர் களாக வாழ வழிபிறக்கும் எனத் தெரிவித்தார்.

### யாழ்ப்பாணக் கல்லூரியில் பாரதி விழா

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த வெள்ளியன்று மாலை 3 மணியளவில் ஒட்லி மண்ட பத்தில், "மகாகவி பாரதி விழா" இடம்பெற்றது.

கல்லூரி தமிழ் மன்றத்தினரால் நடத்தப்பட்ட இந்த விழாவுக்கு தமிழ் மறைத் தலைவர் ச.திகேஸ் தலை மையில் நடைபெற்றது. சிறப்பு விருந் தினராக மதுரை காமராசர் பல் கலைக்கழக இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் இரா.மோகன், மதுரை செந்தமிழ் கல்லூரி தமிழ் துறைப் பேராசிரியர் நிர்மாலா மோகன ஆகியோர் கலந்துகொண்டனர்.



சமுர்த்தி அதிகாரசபையினால் எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு எழுத் தறிவு குறைந்த மாணவர்களுக்கான பாடசாலை உபகரணம் வழங்கும் நிகழ்வும், கணவனை இழந்த பெண்களுக்கான தையல் இயந்திரமும், கயிறு திரிக்கும் இயந்திரமும் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாண பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் பாஷையூர் சென். அன்ரனீஸ் மகளிர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கணவனை இழந்த பெண் ஒருவருக்கு சுயதொழில் முயற்சிக்காக தையல் இயந்திரத்தை யாழ்ப்பாண பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் வழங்குவதையும், அருகில் யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியூமன், பிரதேச செயலக உதவி திட்டப்பணிப்பாளர் மகேஸ்வரன் ஆகியோர் காணப்படுகின்றார் கள்.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : அ. அபிஷாஜினி
முகவரி : முடக்காடு நெல்லியடி கிழக்கு.

### முதலாவது அகவையில்



பெயர் : ஜெ. சாயித்தியா
முகவரி : காளி கோயிலடி, சண்டிலிப்பாய்மத்தி, சண்டிலிப்பாய்.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ் சிறு செய்திகள்

### தெய்வீக இசையரங்கு

(மானிப்பாய்)

நல்லூர் கந்தசாமி கோயில் தீர்த் தோற்சவத்தை முன்னிட்டு, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால், தெல் லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தா னத்தின் ஆதரவுடன் - நல்லூர் துர் க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 25ஆம் நாள் நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில் - என்.வி.எம். நவரத்தினம் - பாட்டு, உடன்பாடுப வர் என்.பரந்தாமன், எம்.விஸ்வமூர்த்தி - வயலின், வி.ரமணன் - மிருதங் கம், சதாவேல்மாறன் - கடம், கே.நந்த குமார் - முகர்சி ஆகியோருடன் பாட் டுக்கச்சேரி இடம்பெறும். (100)

### புளியங்கூடல் பகுதிகளில் திருட்டு அதிகரிப்பு

(வேலணை)

புளியங்கூடல் பகுதியில் கடந்த சில தினங்களாக திருட்டுச் சம்பவங் கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை இரவு புளியங்கூடல் அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள வீடொன்றில் புகு ந்த திருடர்கள், வீடியோ டெக் ஒன் றையும் பெறுமதி மிக்க கைக்கடிகா ரம் ஒன்றையும் திருடிச் சென்றுள்ள னர்.

இதே தினம் இந்தப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இருந்து நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றும் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. (99)

### பட்டம் வழங்கி கௌரவிப்பு

பொன்னாலை வரதராஜப்பெரு மாள் தேவஸ்தான மஹோற்சவத் தில் 18 தினங்களும் "தசாவதாரம்" எனும் தலைப்பில் தெய்வீக சொற் பொழிவாற்றிய ஆசிரியர் இரா. செல்வ வடிவேலுக்கு ஆலய பரிபாலன சபை யினர் "பிரசங்கத் திலகம்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

உற்சவ இறுதித் தினமாகிய நேற்றுமுன்தினம் மாலை 7.30 மணி யளவில் ஆலய முன் மண்டபத்தில் செல்வவடிவேல் ஆசிரியர் நன்றியும், பாராட்டும், வழங்கும் நிகழ்விலேயே இந்தப்பட்டம் அவருக்கு பரிபாலன சபையினரால் சூட்டப்பட்டுக் கௌர விக்கப்பட்டது. (207)

### வேலணைப் பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு

(வேலணை)

இலங்கை மின்சார சபையால் வேலணைப் பிரதேசத்துக்கு வழங் கப்படும் மின்சாரம் கடந்த சில தின ங்களாக சீரற்றதாக காணப்படுகின் றது.

இந்தப் பிரதேசத்துக்கு நாளொ ன்றுக்கு 9 மணியத்தியாலயங்களே மின்சாரம் வழங்கப்பட்டு வந்த போதும், அடிக்கடி இந்த மின் விநி யோகம் முன்னறிவித்தல் எதுவும் மின்றி தடைப்படுகின்றது. இத னால், பொதுமக்கள் தமது அன் றாட நடவடிக்கைகளில் சிரமங் களை எதிர்கொள்கின்றனர். இந்தப் பிரதேசத்துக்கு மின் வழங்கும் மின் பிறப்பாக்கிகள் அடிக்கடி பழுத டைவதே இந்த நிலைக்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (99)



யாழ். வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் கடந்த 9 வருட காலமாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் செல்வி. அ.கனகரத்தினம் அவருடைய அதிபர் சேவையைப் பாராட்டி முன்னாள் பிரதி அதிபர் திருமதி இ. ஆறுமுகம் பொன்னாடை போர்த்துவதைப் படத்தில் காணலாம். (14)






# ஊசிமருந்து வேண்டாம்

ஊசிமூலம் மருந்துகள் ஏற்றுவதைக் கூடுதலாக நோயாளிகள் விரும்புகின்றார்கள். ஏனெனில், அது உடனடியாக நிவாரணத்தைத் தருகின்றன.

ஆனாலும், ஊசிமருந்து ஏற்றுவதன் மூலம் நோயாளிகளுக்கு சில தொற்று நோய்களும் ஏற்படுகின்றன.

மேரிலாந்து, பால்டிமோர், அமெ ரிக்க நாட்டு பல்கலைக்கழகப் பேரா சிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் சேர்ந்து செய்த ஆராய்ச்சிகளின் படி, ஊசிமூலம் மருந்துகளை ஏற்றுவது என் பது மிகவும் கவனமாக இருக்க வேண்டிய ஒன்றாகக் கருதப்படுகின்றது.

விஞ்ஞானிகள் - பக்றீரியாக்களை அழிக்கும் முயற்சிகளில், தொடர்ச்சி யாக 70 வருடங்களாக ஈடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஊசிமூலம் மருந்து ஏற்றுவதையே அங்கீகரித்திருக்கின்றார்கள்.

ஆனாலும், இப்போது வைத்தியர்கள் பெரும்பாலும் ஊசிபோடுதலிலும் பார்க்க, மாத்திரைகள் கொடுப்பதையே விரும்புகிறார்கள். ஏனெனில், ஊசிகள் - நோயாளிகளுக்குப் பல சிக்கல்களை உருவாக்குகின்றன.

தற்போது வருகின்ற பிளாஸ்ரிக் ஊசிகள் - பல பக்கவிளைவுகளையும் உருவாக்குகின்றன. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு 'ஸ்ரிஞ்கள்' மாற்றப் படவேண்டும். இது செய்யப்படாதுவிடின், எஸ்ட்ஸ் போன்ற நோய் பரவும் வாய்ப் புண்டு.

# கம்பியில்லாத ரீவிகேம்



சிறுவர்களுக்கு விருப்பமானதும், அவர்கள் மனதைக்கொள்ளை கொள்ளக்கூடியதுமான வீடியோ கேம்கள் - ஐரோப்பிய நாடுகளில் விற்பனையாகிக் கொண்டு வருகின்றன.

தற்போது கம்பியில்லாமல் 'வயலஸ்' போன்ற ரீவிகேம்களே அதிகளவில் எல்லோருக்கும் விருப் பமானவையாக இருக்கின்றன.

'எக்ஸ் பொக்ஸ்' என அழைக் கப்படுகின்ற ஒரு வகையான ரீவி கேம் அமைப்பு, விசிடிகளைப் போட்டு, அதன் மூலம் பலதரப்பட்ட வீடியோ கேம்களை விளையாடக் கூடியவாறு அமைக்கப்பட்டிருக்கின் றது.

இப்படியான ரீவிகேம்கள் அதிக காலம் பாவிக்கமாட்டாது எனவும், இதில் காணப்படுகின்ற மின்கலங்களின் பாவனைக்காலம் குறைவு எனவும் கூறப்படுகின்றது. ஆனாலும் இந்த வீடியோகேம்கள் அமளியாக விற்பனை யாகிக்கொண்டு வருகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு இனிவருகின்ற வீடியோகேம்களை சூரியக்கலங்கள் மூலம் இயங்க வைக்கமுடியுமா? எனவும் ஆராயப்பட்டு வருகின்றது. இந்த அமைப்பில் இருக்கின்ற கலங்களை சூரிய ஒளி மூலம் சார்ஜ் செய்யமுடியுமா எனத் தொழில் நுட்பவியலாளர்கள் ஆராய்ந்துகொண்டு வருகின்றார்கள்.

ஆனாலும், ரிமோட்டில் இயங்குகின்ற ஒளிக்கதிர்கள் இயக்கத்துக்கு இந்த சூரியக் கலங்களின் மின்னியக்க விசைபோதுமா என்ற கேள்விக்குறி எழுந்திருக்கின்றது. இருந்தாலும், தூரத்திலிருந்து கம்பியில்லா வீடியோ கேம்களை இயக்குகின்ற சிறுவர்களுக்கு வீடியோ கேம் குஷி தான்.



# நீரினால் வரும் புற்றுநோய்

உலகத்தையே புரட்டி எடுத்துக் கொண்ட புற்று நோய் - உடலின் எல்லா உறுப்புக் களிலும் ஏற்படத் தொடங்கியிருக் கின்றது.

சுவீடன், டென் மார்க் போன்ற நாடுகளில் இப் போது நீரின் மூலம் வயிற்றில் புற்று நோய் ஏற்படத் தொடங்கியிருக்கின்றது.

அங்கே காணபபடுகின்ற மாசடைந்த நீரைப் பருகியவர்களுக்குப் புற்றுநோய் ஏற்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அங்கே காணப்படுகின்ற நீர்த்தேக்கங்கள் மாசுபட்டுக் காணப்படுகின்றது. அத்துடன், அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற பாலுணவுப் பொருட்களிலும் புற்று நோய்க் கிருமிகள் காணப்படலாம் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இதேவேளை இங்கே பசுமாடுகளில் கறக்கப்படுகின்ற பாலிலும் நீர் கலக்கப் படுவதால், அதன்மூலமும் புற்றுநோய் பரவியிருக்கலாம் என நம்பப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் கனியுப்பு நீரை மக்கள் விரும்பிக் குடிக்கின்றார்கள். எல்லாக் கடைகளிலும் கனியுப்பு நீர்ப் போத்தல்கள் தாராளமாகக் காணப்படுகின்றன. தற்போது போலி கனியுப்பு நீர்ப்போத்தல்களும் உலகச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கின்றதாக அறியப்படுகின்றது. ஆகவே போலி நீர்ப்போத்தல்களால் புற்றுநோய் பரவவாய்ப்பிருக்கிறது.

◆



மரதன் எலிகள் - சாதாரண எலிகள் ஓடும் வேகத்திலும் பார்க்க, இரண்டுமடங்கு தூரம் ஓடக்கூடியவை. இப்படியான எலிகளை அமெரிக்க மற்றும் தென்கொரியக் கூட்டு விஞ் ஞானிகள் அணி கண்டு பிடித்திருக் கின்றது.

இதற்குக் காரணம் - இத்தகைய எலிகளில் காணப்படுகின்ற அளவுக் கதிகமான புரோட்டீன்சத்துக்கள். இந்தச் சத்துக்கள் அசாதாரணமான சக்தியை எலிகளுக்கு வழங்குகின் றன.

# உற்சாகமான எலிகள்

ஆனாலும், சில எலிகள் இதன் காரணமாக அளவுக்கதிகமான நிறையையும் பெற்றுக் கொள்கின்றன.



இதற்கான காரணத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள். அது இந்த எலிகளில் பிறப்பிக்கப்படும் பி.பி. ஏ.ஆர்.டெல்டா என்ற ஜீன் கள். இவை மாஸ்டர், ரெகு லேட்டர்கள் என அழைக்கப்படுகின் றன.

இவை கொழுப்புச்சத்து மற்றும் கலோரி ஆகியவற்றை அதிகரிக்கச் செய்கின்றது.

இந்த எலிகளுக்கு ஏற்படும் அதீத மான வளர்ச்சியும், உற்சாகமும் மனிதர்களுக்கும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகி றது.

ஆகவே, எலிகளில் ஏற்படக்கூடிய சில ஆராய்ச்சிகளின் முடிவு - மனி தர்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

இதன்மூலம் மனிதர்களில் காணப்படுகின்ற அதீத வளர்ச்சி, குறை வளர்ச்சி ஆகியவற்றுக்கான தீர்வைக் காணமுடியும் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

# நீரிழிவு நோய்க்கு

நீரிழிவு நோயாளிகளுக்கு உடல்நோய்கள் ஏற்படுவது இயற்கை. இதன் காரணமாக - அவர்கள் மிகவும் அவதிப்பட வேண்டிய நிலையில் இருக் கிறார்கள்.



இரத்தத்தில் ஏற்படுகின்ற நீரிழிவு மற்றும் சிறுநீரில் ஏற் படுகின்ற நீரிழிவு ஆகியவற்றைக் குறைப்பதற்கு மருந்துகள், ஊசி கள் ஆகியன வைத்தியத்துறை யில் இருக்கின்றன.

இதன் காரணமாக - நீரிழிவு நோயாளிகள் பக்கவிளைவுக ளால் அவதிப்படுகிறார்கள். இதற்குரிய நல்ல பரிகாரமாக 'பண்டேஜ்' ஒன்று வைத்தியர்க ளால் கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறது.

இந்த பண்டேஜ் நீரிழிவு நோயை மட்டுமல்ல, கால் நோயையும் குறைகின்றது. நீரிழிவு நோயை உருவாக்குகின்ற பக்றீரியாக்களை இந்த பண்டேஜ் குறைக்கின் றது என மருத்துவத் துறைத் தொழில்நுட்ப வியலாளர்கள் கூறுகின் றார்கள்.

# புதிய சிகிச்சை

இந்த வகை பண்டேஜ்கள் - குறித்த வகை வெப்பநிலை, அமுக்கம் ஆகியவற் றைக் கருத்திறகொண்டு, உருவாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கணினிமூலமும் இந்த பண்டேஜைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, தற்போது ஐரோப்பிய நாடுகளில் டிஜிற்றல் கிளினிக்குகளும், உபகர ணங்களும் காணப்படுகின்றன.

இவற்றின்மூலம் வைத்தியர்கள் அருகில்வராமலேயே சில கருவிகள்மூலம் 'ரிமோட் கன்ரோல்' முறையில் சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

◆

## திரை விமர்சனம்

### மதுர



இயக்குநர் மாதேஷ் மிகவும் வர்த்தக நோக்கத்துடன் இந்தப் படத்தை எடுத்திருக்கிறார். இவரின் முதல் படம் மதுர.

காய்கறிச் சந்தையில் கடை வைத்திருக்கின்ற விஜய் - தாய் சீதா மற்றும் இரண்டு தங்கைகளுடன் வருகின்றார்.

வடிவேலு அவருடன் கூடவே வலம் வருகின்றார். விஜயின் காய்கறிச் சந்தையை சோதனையிட வருகின்றார் ரக்சிதா. இவர் விஜய் மேல் காதல் கொள்கின்றார். தங்கையை ஏமாற்றிய பெரிய இடத்துப் பையனை அடித்துவிட்டு வரும் விஜயைக் கைது செய்யவரும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் - விஜயைப் பார்த்து மரியாதை செய்ய - சீதா சந்தேகப்படுகின்றார். பின்பு அவருக்கு விஜய் தனது சொந்த மகன் இல்லை என்பது தெரிய வருகின்றது.

முன்னைய வாழ்க்கையில் விஜய் மதுரை கலக்டராக வருகிறார்.

அவருடைய நம்பிக்கையான உதவியாளரான சோனியா அகர்வால் வருகின்றார். வில்லன் பசுபதிக்கும், விஜய்க்கும் ஏற்பட்ட மோதலில் - சோனியா கொல்லப்படுகின்றார். கொலைப் பழி விஜய் மேல் விழுகின்றது.

சோனியாவின் தாய் சீதா, தங்கைகளுடன் விஜய் மறைந்து வாழ்கின்றார். பின்பு அவர் பசுபதியை எப்படி அழிக்கின்றார் என்பது மீதிக் கதை.

கவர்ச்சிக்கு வரும தேஜாஸ்ரீயை இயக்குநர் வேறு கோணத்தில் இறக்கியிருக்கின்றார். கலக்டராக விஜயின் நடிப்பு மிகைப்படுத்தப்பட்டுள்ளது.

வில்லன் பசுபதி ஒரே மாதிரி வில்லத்தனம். வடிவேலின் நகைச்சுவை ரசிக்கத்தக்கது. அம்மா பாத்திரம் சீதாவுக்கு எடுபடவில்லை. வித்தியாசாகரின் இசையில் 'கண்டேன் கண்டேன்' பாடல் இதமாக இருக்கின்றது.

கனல் கண்ணன் சண்டைக்காட்சிகள் சிறப்பாக உள்ளன. சரவணனின் ஒளிப்பதிவைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. படத்தொகுப்பு ஆண்டனி.

மதுர மக்கள் மனதில் நிற்கும்.

- PNS

## திருட்டு டிவிடி

ஹோலிவூட் உலகென்றால் என்ன? பாலிவூட் உலகம் என்றால் என்ன? நமது தமிழ்ப்பட உலகம் என்றால் என்ன?



ஆனால், திருட்டு விசிடி என்பது மிகப் பெரிய சவாலாகவே விளங்குகின்றது.

இதனைத் தடுக்கும் முகமாக படங்களை வெளியிடும் நிறுவனங்கள் தாங்களே 'டிவிடி சிப்ஸ்களை' வெளியிடுகின்றன.

அமெரிக்க நாட்டின் 'மோஷன் பிக்சர்' என்ற நிறுவனம் தன்னுடைய படங்களை வெளியிடுவதற்கு முன் சில நிறுவனங்கள் களவாக டிவிடி சிப்ஸ்களை வெளியிட்டுவிட்டன.

இதற்காக 'மோஷன்' நிறுவனம் கலிபோர்னியா நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கை எடுத்திருக்கின்றது. இதனால் யுஎஸ் சிக்மா டிசைன்ஸ், தாய்வான் மீடியா டெக் ஆகிய இரண்டு நிறுவனங்களும் தடைசெய்யப்பட்டு இருக்கின்றன. டிவிடியைப் பிரதி செய்வதற்கு சட்டபூர்வமாக அந்தந்த நிறுவனங்களிடமிருந்து அனுமதியைப் பெறுதல்வேண்டும்.

ஆனாலும் சில நிறுவனங்கள் அனுமதியைப் பெறாதே பிரதிசெய்கின்றன. இதனை முற்று முழுதாகத் தடுப்பதற்கு 'டிவிடி ஜோன்' என்ற ஒருவகையான புறோகிறாம் நோர்வே நாட்டு வல்லுநர்களால் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இது 1999 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. ஆனாலும் தற்போதுதான் இதனுடைய தேவை அதிகரிக்கிறது.

## ஆஸ்துமாவும், எக்சிமாவும்



ஆஸ்துமா நோயினால் அவதிப்படுபவர்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

கடந்த 35 வருடங்களாக ஆஸ்துமாவுடன் - எக்சிமாவும், கடும காய்ச்சலும் சேர்ந்து உலகளாவிய ரீதியில் பரவிக் கொண்டு வருகின்றது. ஆனாலும், தற்போதைய ஆய்வுகளின்படி, நவீன மருத்துவ முறைகள் ஆஸ்துமாவை ஓரளவுக்குக் குறைக்கக் கூடியவாறே காணப்படுகின்றன.

1989 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஆய்விலும்பார்க்க, 1994 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஆய்வுகள் ஆஸ்துமா அதிகரிப்பை குறித்துக் காட்டுவனவாக உள்ளன.

இதேவேளை 1999 ஆம் அண்டில் மேலும் இது அதிகரிக்கின்றது. ஆஸ்துமா நோயுள்ள குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் தொடர்ச்சியாக இருமிக்கொண்டே இருக்கின்றார்கள். அத்துடன், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மருந்துகள் அவர்களைக் களைப்படையச் செய்கின்றன.

இந்த மருந்துகளைப் பாவித்து, ஆஸ்துமாவைக் குறைத்தால், அதற்கு நிகரான எக்சிமா நோய் வந்துவிடுகிறது. இதன்காரணமாக ஆஸ்துமா நோயானது தெறிப்பு நோய் என அழைக்கப்படுகின்றது.

ஏனெனின், ஆஸ்துமாவும் - எக்சிமாவும் ஒரே உறையில் இருக்கின்ற இரண்டு கத்திகள். தற்போது 'பம்ப்' சிகிச்சைமுறையே ஆஸ்துமாவுக்கான மிகச் சிறந்த சிகிச்சைமுறை எனக் கருதப்பட்டு வருகின்றது.

## கிரடிட்காட் மோசடி



உலகில் எல்லா வங்கிகளும் கிரடிட் காட்களைத் தாராளமாகப் புழக்கத்துக்கு விட்டிருக்கின்றன. ஆனாலும், வாடிக்கையாளர்கள் தங்களுடைய தில்லுமுல்லுகளை எல்லாம் இந்தக் கிரடிட் காட்களில் காட்டத் தொடங்கி - ஏறக்குறைய 36,000 காட்களை ஏமாற்றியிருப்பதாக ஐரோப்பாவில் இருக்கின்ற வங்கிகள் ஒத்துக் கொள்கின்றன.

கடந்த இரண்டு வருடங்களில் காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளில், 171 மோசடிக்காரர்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தக் கார்ட் மோசடிகளைக் பிறப்பிப்பதற்கென்றே ஒரு விஷேட பொலிஸ்படை முடுக்கி விடப்பட்டிருக்கின்றது. ஒரு விஷேட பிரிவு - பொலிஸ் மற்றும் வங்கி ஊழியர்களையும் சேர்த்து, 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

2003 ஆம் ஆண்டில் மட்டும் 400 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் காட்மோசடி செய்யப்பட்டிருக்கின்றது. தற்போது கூடுதலாக லண்டனில் தான் கார்ட் மோசடி செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இவற்றைத் தடுப்பதற்கு தற்போது புதிய நடைமுறை ஒன்று - சில சர்வதேச விமான நிலையங்களில் காணப்படுகின்றது. அது கிரடிட் காட் உள்ளவர்களுடைய முழு விபரங்கள், அவர்கள் எங்கு செல்கின்றார்கள் என்ற தகவல்களையெல்லாம் கிரடிட் காட் வங்கிகளுக்கு வழங்குகின்றது.

ஆகவே இனி கிரடிட் காட் மோசடிக்காரர்கள் கவனம்.

## வடகொரியாவின் தரைத்தோற்றம்



ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வடகொரிய நாட்டில் இருக்கின்ற சுற்றுப்புறச் சூழலை ஆராய்ந்து வருகின்றது.

யு.என்.ஈ.பி ஸ்தாபனம் செய்த ஆராய்ச்சிகளின்படி, வடகொரியாவின் காடுகள் - நீர், காற்று மற்றும் தாவரங்கள், மிருகங்கள் ஆகியன மற்றைய நாடுகளைவிட ஒரு வித்தியாசமானவையாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஏறக்குறைய 74% மான வடகொரியப் பிரதேசம் - காடுகளினால் சூழப்பட்டிருக்கின்றது.

இங்கே இருக்கின்ற காடுகளிலிருந்து மரக்குற்றிகள், விறகு ஆகியன பெரும்பாலும் எடுக்கப்படுகின்றன. ஆனாலும், தற்போது காடுகளில் ஒருவகையான பூச்சியினங்கள் பரவிக் காணப்படுவதால், காடுகள் அழிகின்றநிலை அங்கு ஏற்பட்டிருக்கின்றது.

இதன் காரணமாக, அந்த இடங்கள் விளைநிலங்களாக மாறக்கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனாலும், இந்தக் காடு மிகக்கூடிய எரிபொருட்களை உலகுக்கு வழங்கியதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடும் வரட்சி காரணமாக வடகொரியாவின் நீர்ப்பிரதேசங்கள் வரட்சியடைந்து காணப்படுகின்றன. கடல்களிலுள்ள மீனினங்கள் இறந்திருக்கின்றன.

வடகொரியாவின் காடுகளில் மிக அரிதாக சிறுத்தைகள், கறுப்புக்கரடி மற்றும் சைபீரியன் புலிகள் வாழ்கின்றன. இங்கு ஏற்படும் காலநிலைமாற்றம் இந்த நாட்டுக்கு ஆபத்தானதாக உள்ளது.

## அதிகரிக்கும் மீன் தொல்லை



விஞ்ஞானிகளின் கடல் ஆய்வுகளின் போது, பெரும்பாலான மீனினங்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. அமெரிக்காவின் கடற்கரைப் பிராந்தியங்களில் 10 மில்லியன்களுக்கும் அதிகமான மீனினங்கள் இவ்வாறாகப் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன.

இதேவேளை - அரிதான மீனினங்களும் முற்றுமுழுதாக அழியக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. ரெட்சினப்பர், காக், ரெட்ரம், பொக்காசியோ ஆகிய மீனினங்கள் - தற்போது விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளுக்குப் பலிக்கடா ஆகியிருக்கின்றன.

இதேபோல வர்த்தக நோக்கங்களுக்காகவும் மீனினங்கள் ஏறக்குறைய 10% அளவில் பிடிக்கப்படுகின்றன. இங்கே பாதிப்புக்குள்ளாகும் மீனினங்களை எடுத்துநோக்குவோமானால், அவற்றினுடைய அழகும், கவர்ச்சியும் ஆச்சரியத்துக்குள்ளாகி இருக்கின்றன.

சில இடங்களில் மீன்கள் அளவுக்கதிகமாகப் பிடிக்கப்படுகின்றன. இது அந்த இடத்தில் மீனினங்கள் அறவே இல்லாது போவதற்கான சந்தர்ப்பமாக அமைகின்றது. உலகளாவிய ரீதியில் மீன்களை உணவுக்குப் பாவிப்பது அதிகரித்திருக்கின்றது.

இதன் காரணமாக ஆழ்கடலில் மீன்பிடி என்பது இரவுபகல் சேவையாக நடைபெற்று வருகின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.




# மாணவர்களின் கல்வி சிறந்து விளங்குவதற்கு உழைத்த பெருமை கல்விக்கழகத்தையே சாரும்

## கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் தெரிவிப்பு

யுத்த காலத்தில் எமது மாணவர்களின் கல்வி சிறந்து விளங்குவதற்கு அயராது உழைத்த பெருமை - தமிழீழ கல்விக் கழகத்தையே சாரும் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்தார்.

அவர் கிளிநொச்சியில் நடைபெற்ற ஆசிரியர் வாண்மை விருத்திச் செயலமர்வில் கலந்து கொண்டு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய மூன்று கல்வி வலயங்களும் சில பொதுவான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அதாவது- கடந்தகால யுத்தத்தால் இந்த மூன்று வலயங்களிலும் 50 வீதமான பாடசாலைகள் இராணுவத்தினால் அழிக்கப்பட்டுள்ளன.

இதைவிட தளபாட வசதிகள், விஞ்ஞான ஆய்வுகூட வசதி என்பவற்றை இழந்துள்ளோம். கிளிநொச்சி வலயத்தில் 98 பாடசாலைகள் இருந்த போதிலும், 57 பாடசாலைகளை இராணுவ நடவடிக்கைகள் மூலம் முற்றாக இழந்துள்ளோம்.

இதைவிட பௌதீக வளங்களை இழந்து, ஆசிரிய வளங்களையும் இழந்துள்ளோம். இன்று சமாதான ஒப்பந்தத்தின் பின்புகூட, எமது கிளிநொச்சி வலயத்தில் 20 பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பாடசாலைகளாக விளங்கினாலும், 5 பாடசாலைகளில் மட்டுமே கணினிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் மின்சார வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

எந்த ஒரு பாடசாலையிலும், அதாவது கல்விப் பொதுத்தராதர உயர்தர பாடசாலைகளுக்கோ அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பாடசாலைகளுக்கோ விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இல்லை. இவ்வாறான வளப்பற்றாக்குறைகளுக்கும் மத்தியில் சகல போட்டிப் பரீட்சைகளுக்கும், போட்டிகளுக்கும் எமது மாணவர்கள் முகம் கொடுத்து பெரும் வெற்றிகளைப் பெற்றுவருகின்றனர்.

இதற்கான அயராத பணியில் எமது ஆசிரியர்கள் விளங்கி வருகிறார்கள். இந்த மூன்று கல்வி வல்யங்களிலும், இலங்கையிலுள்ள 24 கல்வி வலயங்களிலும் உள்ள வளங்களை விட, 50 வீதமான ஆசிரிய வளப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகிறது.

ஏறத்தாழ 50 வீதமான ஆசிரியர்களின் தேவையைத் தொண்டர் ஆசிரியர்களே தாங்கி வருகின்றனர். இவர்களுக்கு பலவருடங்களாகியும் எதுவித நியமனங்களும் கிடைக்கப் பெறாது, வேதனமும் இன்றி சேவையாற்றி வருகின்றனர்.

கிளிநொச்சி வலயத்தில் 98 பாடசாலைகளில் 12 ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே கடமை புரிகின்றனர். கல்விப் பொதுத்தராதர, சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் 52 பாடசாலைகளில் உள்ள போதும், இரண்டு பாடசாலைகளில் மட்டுமே சித்திரப் பாடத்துக்கான ஆசிரியர்கள் உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## காவலரண்கள் பலப்படுத்தப்படுவதால் வங்காலைப் பகுதி மக்கள் அச்சம்

(மன்னார்)

மன்னார் - வங்காலைப் பகுதியில் இராணுவத்தினர் காவலரண்களைப் பலப்படுத்தி வருவதால், இந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாகத் தெரிய வருகிறது.

வங்காலைக் கடற்கரைப் பகுதியில் இராணுவத்தினரின் காவல் நிலையங்களும், காவலரண்களும் கடந்த சில நாட்களாக பலப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இதனால் கடற்தொழிலுக்குச் செல்லும் மீனவர்களும், கரையோர கிராமமக்களும் தமது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில், இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

மன்னார்ப் பகுதியில் - தள்ளாடி இராணுவ முகாம் காவலரண்கள் உட்பட இந்த மாவட்டத்திலுள்ள ஏனைய முகாம்களும், காவலரண்களும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

## வவுனியா மாவட்டத்தில்

# 4 லட்சத்து 76 ஆயிரத்து 402 சதுரமீற்றர் பரப்பளவில் மிதிவெடிகள் அகற்றப்படும்

வவுனியா மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையின் போது, புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. யு.என்.டி.பி நிறுவனத்தின் கீழ் இந்தப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும், இதுவரை இந்த மாவட்டத்தில் 87 ஆயிரத்து 16 மீற்றர் பரப்பளவில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் கல்வி, பொருளாதார, சமூக அபிவிருத்தி குறித்த அரச செயலகம் வெளியிட்ட தகவல்களில் இருந்து மேலும் தெரியவருவதாவது-

மேலும் இந்த மாவட்டத்தில் 3 லட்சத்து 76 ஆயிரத்து 402 சதுரமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டியுள்ளது. 1761 மிதிவெடிகளும், 93 வாகன தகர்ப்பு கண்ணி வெடிகளும், 2 ஆயிரத்து 850 வெடிக்காத ஷெல்களும் அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இந்த மாவட்டத்தில், இரண்டு கல்வி வலயங்களில் உள்ள 193 பாடசாலைகளில் இராணுவ நடவடிக்கைகளின்போது பாதிப்புள்ளாகி இடம்பெயர்ந்த நிலையில், தொடர்ந்தும் 38 பாடசாலைகள் இயங்கிவருகின்றன. இதில் 5 பாடசாலைகள் மூடப்பட்டும் உள்ளன. இதனைவிட தொடர்ந்தும் தமது சொந்த இடங்களில் 150 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. மொத்தமாக 44 ஆயிரத்து 203 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்தப் பாடசாலைகளில் 1614 ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சரா சரியாக 27.3 வீதமான ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

உலகவங்கியின் நிதியுதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனம், வீதிகள், கிணறுகள், புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. அனுமதிக்கப்பட்ட 656 கருத்திட்டங்களுக்கு என்று 496 மில்லியன் ரூபாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 90 வீதமான வேலைத் திட்டங்கள் 379.3 மில்லியன் ரூபா செலவில் பூர்த்திசெய்யப்பட்டுவிட்டது. எஞ்சிய வேலைத் திட்டங்கள் இவ்வாண்டு இறுதிக்குள் பூர்த்தியாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியா மாவட்ட விவசாயிகள் வரட்சியின் காரணமாக பாதிப்பு

வவுனியா மாவட்டத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில் 21 ஆயிரத்து 10 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இந்த நிலப்பரப்பில் பெரும் போகமாக 5 ஆயிரத்து 579 ஹெக்ரெயரிலும், சிறுபோகமாக 10 ஆயிரத்து 803 ஹெக்ரெயரிலும் மானாவாரியாக 4 ஆயிரத்து 628 ஹெக்ரெயரிலும் விவசாய முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொழிலை நம்பி 26 ஆயிரத்து 274 விவசாய குடும்பங்கள் இந்த மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது நிலவும் வரட்சி காரணமாக பெருமளவு பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் 22,871 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து பெரும் பாதிப்புக்குள்ளான வீடுகளைப் புனரமைப்புக்கான உதவியை உலக வங்கி வழங்கியுள்ளது.

வீடு முற்றாக பாதிப்புக்குள்ளாகி இருப்பின், 150,000 ரூபாவும், பகுதிப் பாதிப்புக்கென 70,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

2004 ஆம் ஆண்டில் 100 வீடுகள் முழுமையாக புனரமைக்கப்படுகின்றன. இதில் கரைதுறைப்பற்றில் 50 வீடுகளும், ஒட்டுசுட்டானில் 25 வீடுகளும், மாந்தை கிழக்கில் 25 வீடுகளும் அமைக்கப்படுகின்றன.

இதன் முதற்கட்டக் கொடுப்பனவாக 20,000 ரூபாவும், இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக 35,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டக்கொடுப்பனவாக 70,000 ரூபா வழங்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் அயராத முயற்சியினால், இந்த நிதி கிடைக்கப்பெற்றது. இந்தத் திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

2005 ஆம் ஆண்டில் முழுமையாக பாதிப்புக்குள்ளான 23,000 வீடுகளும், பகுதிப் பாதிப்புக்குள்ளான 590 வீடுகளும் புனரமைக்கப்படவுள்ளன.

2006 ஆம் ஆண்டில் முழுமையாக பாதிப்புக்குள்ளான 1500 வீடுகளும், பகுதிப் பாதிப்புக்குள்ளான 96 வீடுகளும் புனரமைக்கப்படவுள்ளன என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

## திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

மன்னார் நகர்ப்பகுதியிலும் அதனை அண்டியபகுதிகளிலும் கூடுதலான திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கல்வி நிலையங்கள், நூலகம் ஆகிய இடங்களிலேயே கூடுதலான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## சிரமதானம்

(பளை)

தியாக தீபம் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு பளை கோட்ட அரசியற்துறைக்குட்பட்ட நகரை அண்டிய பகுதிகளில் இன்று சிரமதானம் மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களும், தொண்டர் நிறுவன பணியாளர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தையல் பயிற்சி நிலையம்

(கண்டாவளை)

கண்டாவளை - கல்மடுநகர்ப் பிரதேசத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இதனை அந்தப்பிரதேசத்துக்கு புதிதாக வந்த பிரதேச செயலர் நேற்றுப் பார்வையிட்டார். (இ)

## ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புனரமைப்பு

(மன்னார்)

மன்னார் கிராமம் - ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. இந்தக் கிராமத்தில் மக்கள் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து, மீண்டும் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றமையால், அவற்றைப் பூர்த்தி செய்யும் முகமாக வீதி புனரமைப்பு, குடிநீர் வசதிகள் போன்றவற்றை பூர்த்தி செய்யும் ஊரக வளர்ச்சி திட்டத்தினரால் இந்தப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.





பரந்தன் அஞ்சல் அலுவலக கட்டடம் இதுவரையில் திருத்தப்படாத நிலையில் இருப்பதை முதலாவது படத்திலும், தற்காலிகமாக கடை ஒன்றில் இயங்கி வருவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

படம்: சு.பாஸ்கரன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நீங்கான் வெகுலி நிறைஇலன் எஞ்ஞான்றும்*
*யாங்கணும் யார்க்கும் எளிது.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தேசிய நலனா? அரசியற் சுயநலனா? தீர்மானிக்க வேண்டியவர் ஜனாதிபதியே...

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணும் முயற்சி முன்னெடுப்புக்களின் எதிர்காலம் ஆக்கபூர்வமாக அமையுமென்ற நம்பிக்கை கிட்டத்தட்ட முழுமையாக அருகிவிட்ட நிலையில், போர் மூளும் அபாயம் குறித்த எச்சரிக்கைகளும் அச்ச உணர்வும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளமையானது மக்கள் மத்தியில் குழப்பத்தையும் சஞ்சலத்தையும் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதி என்னதான் சமாதான முயற்சிகளில் தான் உறுதியாக இருப்பதாகவும் போர் இனி மூளும் அபாயம் இல்லவே இல்லையெனவும் பொதுவாகப் பேசியும் அறிக்கை விட்டும் வந்தாலும் 'பேச்சுப்பல்லக்கு தங்கச்சி கால்நடை' என்ற கதையே தொடர்வதாகவுள்ளது.

ஒருபுறம் மீண்டும் போர் குறித்த அச்சம் மறுபுறம் பொருளாதார நெருக்கடி பொதுமக்கள் பல முனைகளாலும் நெருக்குவாரத்தை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள்.

அரசின் திறைசேரிக்களஞ்சியம் வரண்டுபோய்விட்டதை சர்வதேச சமூகத்தை நோக்கிய அரசின் கையேந்தி நிற்கும் நிலை அப்பட்டமாக்கியுள்ளது. வாக்குறுதியளித்த கடனை சமாதானப் பேச்சுவார்த்தையை நிபந்தனையாக்கி - தராதிருப்பது சரியல்ல.... நாடு பெரும் நிதிநெருக்கடியை எதிர்கொள்ளும் அபாயத்தில் இருக்கிறது என ஜப்பானில் போய்நின்று கொண்டு லக்ஷ்மன்கதிர்காமர் ஒப்பாரிவைக்காத குறையாய் அவலக் குரல் எழுப்பியுள்ளார்.

இந்தக் கதிர்காமரின் குரல் இலங்கையின் கையறு நிலையை உலகிற்கு எடுத்தியம்பியுள்ளது.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்த நம்பிக்கையின் அடிப்படையில் வழங்குவதற்கு உறுதியளித்த பெருந்தொகைக் கடன்நிதியினை சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் திராணியோ, விருப்போ அற்ற பலவீனமானதும் சமாதான விரோத சக்திகளின் ஆதிக்கம் நிறைந்ததுமான ஒரு அரசிடம் ஒப்படைப்பதென்பது எவ்வளவு ஆபத்தானது என்பது எவருக்கும் விளக்கிக் கூறவேண்டியதொன்றல்ல.

இன்றைய சமாதான சூழலிலும் இராணுவத்தை, கடற்படையை, விமானப்படையை நவீனமயப்படுத்தி - பலப்படுத்த முனைப்புடன் செயற்படத்துடித்து நடவடிக்கைகளில் இறங்கியுள்ள அரசு சமாதானத்தின் பேரால் வழங்கப்படும் நிதியை யுத்த தேவைகளுக்கு பயன்படுத்தாது என்பதில் என்ன நிச்சயம்?

அதேவேளை படைத்தரப்புக்கு இராணுவ ஆயுத தளபாடங்கள் தாக்குதல் விமானங்கள் போன்ற வற்றையும் அவற்றுக்கான பயிற்சிகளையும் பல்வேறு நடவடிக் கைகளின் பேரால் வழங்கியபடி, நிதியுதவிகளையும் கொடுத்து அவர்களை யுத்த சன்னதர்களாக தயார்படுத்திவரும் அமெரிக்கா உட்பட பல நாடுகள் சமாதான உபதேசமும் செய்து வருவதானது சாத்தான் ஓதும் வேதமாகவே உணர முடிகிறது.

முன்னரும் அபிவிருத்திக்கென்று கூறி வழங்கப்பட்ட நிதியை தங்கள் நாட்டில் கழிக்கப்பட்ட இராணுவ ஆயுத தளபாடங்களை, விமானங்களை, கப்பல்களை இலங்கையின் தலையில் கட்டியடித்து, பறித்துக்கொண்ட வரலாறு இனியும் தொடரும் அபாயமே தென்படுவதாகவுள்ளது.

இது இலங்கையை மேலும் மேலும் பாரிய நெருக்கடிக்குள் - எக்காலத்திலும் மீளமுடியாத நிலைக்குள் தள்ளவே உதவும்.

இன்றைய அரசிடம் முறையான சமாதான முன்னெடுப்புத் திட்டமும் இல்லை. தெளிவான பொருளாதார அபிவிருத்தித் திட்டமும் கிடையாது. மூன்றாண்டு காலமாகத் தொடரும் சமாதான சூழலை மேலும் வலுப்படுத்தி இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியற் தீர்வொன்றை நியாய முறையில் எட்டுவதற்கான வாய்ப்பினை பயன்படுத்த விருப்பமின்றி தங்கள் தங்கள் எதிர்கால அரசியல் இலாபங்களுக்காக, அதனை கைநழுவவிடத் தயாரக இருக்கும் ஒரு அரசிடம் ஆட்சியை ஒப்படைத்த மக்கள் அதாவது பெரும்பான்மையின மக்கள் அதன் எதிரொலியை உணரத்தொடங்கியுள்ளனர்.

விஷம்போல் ஏறும் விலைவாசியை சர்வதேச சந்தையை காரணம்காட்டி நியாயம் கற்பிக்க முனையும் அரசிடம் பொருத்தமான பொருளாதாரத் திட்டம் எதுவுமில்லையென ஐக்கிய தேசியக்கட்சியே குற்றம்சாட்டியுள்ளது.

ஏற்கனவே எரிபொருளில் தொடங்கிய விலைவாசி உயர்வு மக்களின் அடிவயிறே எரியும் பிரச்சினையாக விஸ்வரூபம் கொள்ளத் தொடங்கியுள்ளது. தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசுக்கு வக்கில்லை. இந்த நிலையில் அபிவிருத்தி குறித்த திட்டங்களை கிடப்பில் போடுவதைவிட அரசுக்கு வேறு வழியேயில்லை.

சமாதானம் தொடர்வது சந்தேகத்துக்குரியதான நிலையில், ஏதோவொரு வழியில் போரை ஆரம்பிப்பதன் மூலம் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளிலிருந்து அவர்களை திசை திருப்பி விடலாமென அரசு திட்டம் போடுவதாக அரசியல் நோக்கர்கள் கருதுவதை பிழையென்று எவராலும் நிராகரிக்க முடியாது.

கடந்தகாலங்களில் இவ்வாறான அணுகுமுறையையே இலங்கையின் ஆட்சிப்பீடத்திலிருந்த அரசுகள் கடைப்பிடித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மீண்டும் போர் குறித்த பீதியானது வெளிநாட்டு முதலீடு, சுற்றுலாத்துறை, பங்குச் சந்தை, ஏற்றுமதி வர்த்தகம் போன்ற சகலதையும் பாதிக்கும் அபாயமேயுள்ளது. சமாதானத்தை தக்கவைக்க சமாதான விரோத சக்திகளுடன் துணிச்சலாக மோதும் திராணி ஜனாதிபதிக்குக் கிடையாது என்பது பெருமளவு உறுதியாகி வரும் சூழலில் - போரும் பொருளாதார வீழ்ச்சியும், இலங்கையை மீளா அவலத்துள் ஆழ்த்தும் அபாயம் ஏற்படவே செய்யும் என்பது உறுதி. இந்தக் கட்டத்தில் - அரசியல் சுயநலத்துடன் தன்னைக் காப்பாற்றவா? அல்லது தேசிய அக்கறையுடன் நாட்டைக் காப்பாற்ற சமாதானத்தைப் பாதுகாக்கவா? ஜனாதிபதி முயலப்போகிறார்....?

இது அடுத்துவரும் வாரங்களில் தெரியும்.

# நாடும் நடப்பும்




# ஆட்டுப்பட்டி கிராம அபிவிருத்திக்கு ஐந்து மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் நிகொட்டினால், ஆட்டுப்பட்டிக் கிராம அபிவிருத்திக்கென 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நிகொட்டின் யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் க.நவரட்ணராஜா தெரிவித்தார்.

மிக நீண்டகாலமாக அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் இந்தக் கிராமம் அடிப்படை வசதிகளில் பின்தங்கிக் காணப்படுகின்றது.

இதனால் தொழில் பயிற்சிகளை ஆரம்பித்தல், சமூக இணைப்பாக்கத்தை உருவாக்கல், சிறுகடன் திட்டத்தை நடைமுறைப் படுத்தல், சமூக நிறுவனங்களை வலுப்படுத்தல், வீதி அமைத்தல், சத்துணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், பொது மண்டபங்களை நிறுவுதல், முன்பள்ளிகளை அமைத்தல், சிறுவர் பூங்காக்களை அமைத்தல், மலசல கூடங்களை அமைத்தல் போன்ற பணிகளுக்கே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் யாவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் செயற்படுத்தப்படுகின்றது.

இவற்றுள் பொதுநோக்கு மண்டபத்திற்கான வேலைகள் முடிவடைந்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

ஏனைய பணிகள் யாவும் எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் முடிவடையக்கூடிய விதத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனைவிட நிகொட் நிறுவனத்தின் நேரடி நிதி வழங்கல் மூலம் மின்விநியோகம், நீர் விநியோகம் என்பன அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராம அபிவிருத்தி நடவடிக்கை மூலம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ப)

## மருதங்கேணி - ஆழியவளை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணிப் பிரதேசத்தின் பிரதான வீதியாக விளங்கி வரும் மருதங்கேணிச் சந்தி - ஆழியவளை வரையுள்ள 4 மைல் நீளமான, கல்லினாலான வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு தொண்டர் நிறுவனங்களிடமும், அரசாங்க அதிபரிடமும் இந்தப் பிரதேச பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகள் வரை யாழ்ப்பாணம் (807), பருத்தித்துறை (762), கிளிநொச்சி (806) ஆகிய பஸ் சேவைகள் இந்த வீதியின் ஊடாகவே ஆழியவளை வரை நடைபெற்று வந்தன. மழைகாலம் தொடங்கினால், இந்த வீதியே போக்குவரத்துச் சேவைக்கு பயன்பாடு உடையதாக உள்ளது.

எனவே இந்தப் பிரதேச மக்களின் நன்மை கருதி இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## திருத்தப்படாத வீதிகளால் மக்கள் பெரும் சிரமம்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் கிழக்கெல்லைக் கிராமங்களான - வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கோயில்-போக்கறுப்புப் பகுதியிலுள்ள குறுக்கு வீதிகள், சுமார் 30 வருடங்களாக திருத்தப்படாத நிலையில், மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையிலுள்ளன.

இந்தக் கிராமங்களில் புதிதாக 250 வீடுகளை அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேலைகளுக்குரிய கல், பாலியாற்றுமண், கூரைத் தகடுகள் ஏற்றிவரும் பாரிய வாகனங்கள் இந்த வீதிகளில் புதையுண்டு, பொருட்களை உரிய இடங்களில் இறக்காது வீதியிலேயே இறக்கிவிடும் நிலை ஏற்படுகிறது.

இந்த வீதிகள் பருத்தித்துறை பிரதேசசபையின் பராமரிப்பிலேயுள்ளன. இந்த வீதிகளைத் திருத்தித் தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடப்பட்டிருந்தும், இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

(21)

## யாழ்.கல்வி வலயத்தில் சைவசமயப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்விவலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சைவ சமயப்போட்டிகள் - பாடசாலை, கோட்டம், வலயம் ஆகிய நிலைகளில் இடம்பெறவுள்ளன.

தரம் 3 முதல் 13 வரையான மாணவர்களுக்கிடையே சமய அறிவு எழுத்துப்போட்டி, பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, சகலகலா வல்லிமாலை ஓதல் போட்டி, கோலப் போட்டி, தோரணம், மாலை கட்டும்போட்டி ஆகிய போட்டிகளே இந்த மாதம் 30 திகதிக்கு முன் நடத்தப்பட்டு, முதலாம் இடங்களைப் பெறும் மாணவர்களது விபரங்களை உரிய கோட்டங்களுக்கு அனுப்பும்படி யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் ஒக்ரோபர் மாதம் எட்டாம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை பி.ப 1 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும், வலயமட்டப் போட்டிகள் ஒக்ரோபர் 16 ஆம் திகதி நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(91)

# சித்தாந்த பண்டிதர் பரீட்சை சித்தியடைந்தோர் விபரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்திய சித்தாந்த பண்டிதர் பரீட்சையில், சித்தியடைந்தோரின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி சைவ சித்தாந்த பிரவேசப் பரீட்சையில் 6 பேரும், சைவ சித்தாந்த பாலபண்டிதப் பரீட்சையில் 3 பேரும், சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சையில் 5 பேரும் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்தோரின் விபரம் வருமாறு-

### சைவசித்தாந்த பிரவேச பண்டிதர்

சபாநாதன் பாரதி (சுன்னாகம்) 2 ஆம் பிரிவு, அ.வேதவித்தியாசாகரர் (கந்தர்மடம்) 3 ஆம் பிரிவு, நிஷாந்தினி பரராஜசிங்கம் (காரைநகர்) 3 ஆம் பிரிவு, சிவரூபி நவசிவாயம் (காரைநகர்) 2 ஆம் பிரிவு, க.சிவநேசன் கொடிகாமம் 3 ஆம் பிரிவு, மு.அருள்செல்வநாயகம் (கொடிகாமம்) 2 ஆம் பிரிவு

### சைவசித்தாந்த பால பண்டிதர்

சுகாஜினி கிருஷ்ணபிள்ளை (சாவகச்சேரி) 2 ஆம் பிரிவு, வைத்திலிங்கம் இரகுநாத முதலியார் (யாழ்ப்பாணம்) 2 ஆம் பிரிவு, தவராசா விக்கினேஸ்வரன் (யாழ்ப்பாணம்) 2 ஆம் பிரிவு.

### சைவசித்தாந்த பண்டிதர்

சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் (இணுவில்) 2 ஆம் பிரிவு, சசிரேகா கனகசுந்தரம்பிள்ளை (அச்சுவேலி) 2 ஆம் பிரிவு, வா.சாந்தினி (சுழிபுரம்) 2 ஆம் பிரிவு, குஞ்சிதபாதம் சுரேஸ்குமார் (யாழ்ப்பாணம்) 2 ஆம் பிரிவு, புஸ்பலதா இராமலிங்கம் (கிளிநொச்சி) 2 ஆம் பிரிவு.

## நல்லூர் - நேற்று தேர், இன்று தீர்த்தம், நாளை பூங்காவனம்

# சர்வ சக்தியுள்ள நல்லைக் கந்தன்



நல்லன எல்லாம் தரும் நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழா நேற்று பக்தி பரவசத்துடன் நடைபெற்றது.

உலகம் முழுவதும் வாழும் ஈழத்தமிழர்களின் இதயத்தில் உறைந்த திருக்கோயில், நல்லூர்க் கந்தன் திருக்கோயிலாகும். தமிழ் வேந்தர் எம் தேசத்தை ஆண்ட காலத்தில் தலைநகர் நல்லூரில் பெருமாடக்கோயிலாக இந்தப் புனிததலம் விளங்கியுள்ளது.

அந்நியராட்சியில் அற்புதமான நல்லைக்கந்தன் திருக கோயில் முற்றாக அழிக்கப்பட் டது. மன்னர் காலக் கோயில் இருந்த இடத்தில் கிறீஸ்தவ தேவாலயம் கட்டப்பெற்றது. ஆலய உடைமைகள் அபகரிககப்பட்டன. 300 ஆணடுகள வரை வேலை மறைதது வைத்து, வழிபட்ட சைவமக்கள் நல்லைக்கந்தனைத் தம் அகத்திலே நினைந்து பூசித்துக்காத்தனர்.

இன்று நல்லூர்க் கந்தன் ஆலயம் அமைந்திருக்கும் புதிய இடத்தை வாங்கி, முருகன் திருக் கோயிலைக்கட்டுவித்தவர் அமரர் ஸ்ரீமான் இரகு நாதமாப் பாண முதலியார் ஆவார். இவர் வழி வந்த மரபி னரே இன்றுவரை கோயிலை மிகப்புனிதமாகப் பேணி வளர்த்து வருகின்றனர்.

கலியுகவரதனாக விளங்குகின்ற நல்லைக் கந்தப்பெருமான் திருவருளை வியக்காதவர்கள் இல்லை. அவனது திருவீதியில் வலம் வந்தால் போதும். சுமந்து வந்த துன்பம் அகன்று சுகம் அகத்தில் மலரும். மிக அழகாக ஆனந்தப் பொலிவு தரும் கந்தன் சந்நிதானத்தில் கைகூப்பித் தொழுதவர்கள் தோற்றுப்போவதில்லை. வேலின் சக்தி எதையும் வெல்ல வைக்கும் வேலனின் வேலைத் தொழுதவர்கள் நாளும் அவனை நாடி வருவதில் ஆர்வம் கொள்வர். இறைசக்தி நிறைந்த இனிய தெய்வத்தின் திருவிழா ஈழத்தவர்களின் பக்தி எழுச்சியை வெளிப்படுத்துகின்ற விழா. கலை, கலாசாரம், பண்பாட்டுப் பாரம்பரியங்களை எம் சந்ததி பேணுவதற்கு வாய்ப் பூட்டுகின்ற பெருவிழா. நல்லூர்க் கந்தனின் திருவிழாக் காலத்தில் வீடுகளும் புனிதம்பெற்று, அடியவர்களின் உள்ளமும் புனிதம் பெற்றுவிடும். குழந்தைகள் முதல் முதியோர்வரை நல்லூரான் பற்றிய சிந்தைனையிலேயே மூழ்குவர்.

புலம்பெயர்ந்து மேலை நாடுகளில் வாழும் மக்களிடையேகூட, நல்லூரான் உற்சவகாலத்தை நினைந்து வணங்குவர். அதனை மையமாகக்கொண்டு, அந்த நாடுகளில் முருகத் தலங்களில் திருவிழா நடைபெறுவது வழக்கமாகி வட்டது. கனடா, லண்டன், அவுஸ்ரேலியா, சுவிற்சர்லாநது போன்ற நாடுகளில் நல்லூர் உற்சவவிழா சிறப்பாக நடைபெறுகிறது. புலம்பெயர்ந்து வாழும் மக்கள்தொலைக்காட்சி, வானொலி, இணையம் ஊடாக நல்லூர்த் திருவிழா வைத்தரிசித்து இன்புற்று வருகிறார்கள். இந்த வகையில் நல்லூரானின் பெருமை உலகம் முழுவதும் வியாபித்த வண்ணமாகவுள்ளது.

**கலியுக வரதனாக விளங்குகின்ற நல்லைக் கந்தப்பெருமான் திரு வருளை வியக்காத வர்கள் இல்லை. அவனது திருவீதியில் வலம் வந்தால் போதும். சுமந்து வந்த துன்பம் அகன்று சுகம் அகத்தில் மலரும். மிக அழகாக ஆனந்தப் பொலிவுதரும் கந்தன் சந்நி தானத்தில் கைகூப்பித் தொழுதவர்கள் தோற்றுப் போவதில்லை.**

நல்லூர்க் கந்தன் ஆறுமுகப் பெருமானாகத் திருத்தேரில் பவனிளவருவான். இலட்சோப இலட்சம் மக்கள் கூடிநின்று, அவன் திருத்தேர்ப பவனியை வழிபடுவர். முருகனின் திருத் தேர் வடத்தைப் பிடித்திழுத்து, வாழ்வு கேடபதற்காக இளைஞர்கள் முண்டியடிப்பர். மலைபோல் தேங்காய்கள் வீதியெல்லாம் குவிக்கப்பட்டு, சிதறு தேங்காய் உடைத்து, சித்திரத்தேரில் வரும் முருகனை வரவேற்பர். திருவருள் தரும் முருகப் பெருமான் தங்கவேல், தங்கமுடி, தங்க உருத்திராட்ச மாலைகள் அணி செய்ய, திருத்தேரில் பவனிவருவார். ஆறுமுகன் தேரில் வரும் அழகுக்காட்சி வர்ணிக்க முடியாதது. அலை அலையாகத்திரளும் பக்த வெள்ளத்திலே தேர் ஊர்ந்து வருவது, மிதந்து வருவது போல இருக்கும். தீமைகளை அழித்து, நன்மைகள் தருவதற்காக முருகன் தேர்ஏறி வந்தான். தற் போது தர்மம் அழிகின்றன. எனவே எம்மைச் சூழ்ந்த தீமைகள் அழிந்து நன்மைகள் கிடைக்க அனை வரும் ஒன்றுகூடி அவனை இறைஞ்சுவோமாக.

வேதனையிற் சோதனையில்
வென்று விடுகிறோம் – சுடர்
வேலவனுன் செயலைச் சொல்ல
ஒன்று படுகிறோம்
சாதனையின் உச்சியினை
சென்று தொடுகிறோம் – சர்வ
சக்தியுள்ளதென்னவென்று
கண்டுவிடுகிறோம்.

என்ற பாடலுக்கு அமைய சர்வசக்தியுள்ள முருகனை ஒன்றுபட்டு, வழிபட்டு உய்வோமாக.

ஆறு .திருமுருகன்

## தேர்த்திருவிழா - ஒரு சிந்தனை

க.சிவராமலிங்கம்

# ஒன்று கூடித் தேரிழுத்தோம் வென்று கொண்டோம் திருவருளை



வருடா வருடம் திருவிழாக் காணும் சைவக் கோயில்களில் தேர்த்திருவிழா - உலா மிகமுக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது.

ஆகம, புராண, இதிகாச நெறி நின்று காலங்கடந்த விழா தேர்த் திருவிழா.

மெய்யடியார் உள்ளமாகிய தேர்ஏறி மகிழ்ந்தும், மகிழ்வித்தும் நிற்கும் இறைவனுக்கு, மககள் நாம்உளமார விழா எடுத்து, மகிழ்கிறோம், போற்றுகிறோம்.

தேர்த்திருவிழாவின் தத்துவம் அகலமும், ஆழமும் கொண்டது. அறிஞர் பலர் விளக்கம் தந்துள்ளனர். ஒரு சிலவற்றை உசாவுதல் இன்று பொருந்தமுடையதே.

தேர்த்திருவிழாவை - சங்காரத் திருவிழா என்ற கருத்து, பொது மககளிடையே வேண்டாத கருத்தையும் தோற்றுவித்துள்ளது.

சைவசமயக் கிரியைகளும், விழாக்களும் அறிவியல் ரீதியானவை. ஆன்றவிந்தடங்கிய சான்றோர் சிந்தனையில் தோன்றியவை.

இவர்களை அனுஷ்ட்டித்து நின்று. ஆன்மாக்களின் ஈடேற்றத் துககாக இறைவனாலேயே பேசப்பட்டவை என்று கொள்ளப்படுவன.

முப்புரம் எரிசெயத விரிசடைக் கடவுள் என்று சிவபிரான் பேசப்படுகிறார்.

இந்தச் செய்தியோடு இணைத்துப் பேசப்படும், 'அச்சது முதி செய்த' ஐங்கரன் திருவிளையாடலும, தேரின்பாகங்களாய் அமைந்த 'சிறுதேவர்' சிந்தனைகளும், குதிரைகளாக அமைந்த நால் வேதங்களின் 'நானும்' எல்லாம் உணர்ந்த சிவன் தன் புன்சிரிப்பால் முப்புரம் எரிசெய்து, மூவர்க்கு அருள் புரிந்த செய்தியும், தெரிந்து தெளிய வேண்டியவை.

'சங்கரன்' - என்ற சொல் சுகத்தைச் செய்பவன் எனப்பொருள் தருவது. இறைவன் உயிர்களின் விடுதலைக்காகக் ஐந்தொழில் புரியும, ஊதியம் வேண்டாத் தொழிலாளி, இந்த அருட்செயலே சங்காரம்.

ஆக, இந்தச் சங்காரம் அச்சம் தரும் ஒன்றல்ல.

எனவே, தாய்மை நிலையில் உள்ள பெண்கள் தேர்த்திருவிழா தரிசனம் செய்தல் தவறு என்ற ஆதாரமற்ற நம்பிக்கையும் அறிவுடமை ஆகாது. கோயில்கள் சமுதாய நிலையங்களே என்ற கருத்து, காலப்போக்கில் மறக்கப்பட்டு விடுமோ! என்று அஞ்ச வேண்டியுள்ளது.

ஒரு சைவ, சிவசம்பந்தமான மக்கள் சமுதாயத்தை உருவாக்கவே நாயன்மார்களும், ஆழ்வார்களும் தொடர்ந்து தோன்றிய அருளாளர்களும், அரும்பாடு பட்டார்கள்.

இவர்களின் வாழ்க்கைச் சுவடுகள் திருவாய் மலர்ந்த தெய்வப பனுவல்கள் இவர்கள் திருவுளக்கருத்தை பறைசாற்றி நிற்கின்றன.

ஒரு பத்து, இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் நோக்கிப் பார்க்கின்றேன்.

தேர்த்திருவிழாவுக்கு முதல் நாள் தேர் கட்டப்படுகிறது.

ஊரில் வாழ்ந்த அத்தனை சமுதாயப் பிரிவினரும் ஒன்று கூடித்தேரை உருவாக்குகிறார்கள்.

அவர்கள் உள்ளங்களில் ஒரு மகிழ்ச்சி, முகங்களில் ஒரு பிரகாசம், பெருமிதம். எங்கள் தெயவதது்க்கு ஒரு தேர் அமைத்துள்ளோம் என்ற பெருமிதம்.

முப்புரம் எரி செய்யப்புறப்பட்ட சிவனுக்கு அமைந்த தேரின் பாகங்களான தேவர்கள் கொண்ட மமதை அல்ல. கல்லாலும், சாந்தாலும் கோயில் கட்ட வாய்ப்பில்லாத, பூசலார், பக்தியால் உள்ளத்தில் பெருங்கோயில் சமைத்தபோது, அவர் அடைந்த பெருமிதம் போன்றதே ஊர்மக்கள் கொண்ட பெருமிதம்.

இறைவன் தொண்டில் எல்லோரையும் ஈடுபடுத்துதல், பெரும் தொண்டு என்று கருதியே எம் அருளாளர்கள் கால் தேய நடந்து, பாடினார்கள், பாடுவித்தார்கள்.

இன்று வடம் பிடித்தல் ஒன்றோடு நாம் சாந்தி அடைகிறோம்.

அறிவியல் வளர்ச்சியால் வேகமான மாற்றங்கள்.

இதனால் மனித உள்ளங்கள் மாறுபடக்கூடாது, தொண்டு செய்தலை மறந்து விடக்கூடாது என்று வேண்டுதல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இனறைய அறிவியல் வேக வளர்ச்சியை தாருகாவனத்து ரிஷிகளின் அறிவியல் வளர்ச்சியுடன் ஒத்து நோக்குவது சுவாரஸ்யமானது.

இன்று பல அழிவுதரும் ஆயுதங்களை அறிவியல் நமக்குத் தந் திருக்கிறது. அன்று, தாருகாவனத் தாருக்கும் பல ஆயுதங்களைப் படைக்கும் ஆற்றல் கிடைத்து சூலமும், மழுவும் உருவாக்கப்பட்டன.

அதுவரையும் சரி.

இன்று அணுசக்தி, கண்டுபிடித் தவனையே அழித்து நிற்கிறது.

ஆக்கத்துக்கு உதவ வேண்டியது அழிவுக்குக் காரணமாகிறது. அன்று ரிஷிகளின் செயலும், அவர்களின் அழிவுக்கு வழிகோலின.

எனவே நல்லைக் கந்தன் தேர் ஏறி - மனோவேகப் பொற்றேர் ஏறி தன் அருளை பன்னிரு கரங்களாலும் வாரி வழங்கும் போது 'வந்து முந்துமின்'

எமது சிறுமையையும், ஆறுமுகன் பெருமையையும், உணர்ந்து உய்ய வழிபிறக்க, 'அவனருளாலே அவன் தாள்' வணங்குவோம்.

'முப்புரம் எரி செய்தமை மும்மல காரியம்'

சிறு தேவர் செருக்கடங்கியது முப்புரம் எரி செய்யப் புறப்பட்ட தேர். எமது மும்மலம் செயலிழக்கத் தேர் ஏறி வருகிறான் நல்லைக் கந்தன்.

இழக்க வேண்டியதை மகிழ்வுடன் இழப்போம்.

பெறவேண்டிய அவன் திருவருளை பெருமிதத்தோடு துய்ப்போம்.

**'சூழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் நான் இவர்க்கு ஆளாய் வாழுதல் வேண்டும'**

□□□

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

147. யா/பரு/ 5306 திரு. ஜேம்ஸ் வைரவப்பிள்ளை
148. யா/பரு/ 5310 திருமதி. பூரத்தினம் சாந்தரத்தினம்
149. யா/பரு/ 5337 திருமதி. செல்வரத்தினம்
அருமைராசா
150. யா/பரு/ 5398 செல்வி. ஞானேஸ்வரி சின்னத்துரை
151. யா/பரு/ 5474 திருமதி. தில்லையம்மா கந்தசாமி
152. யா/பரு/ 5542 திரு. ஞானப்பிரகாசம் சாள்ஸ்
153. யா/பரு/ 5546 திரு. நாகலிங்கம் சோமசுந்தரம்
154. யா/பரு/ 5560 திருமதி. மகேஸ்வரி
விநாயகமூர்த்தி
155. யா/பரு/ 5603 திரு. முருகேசம்பிள்ளை
மகாலிங்கம்
156. யா/பரு/ 5613 திரு. செல்லையா இராசதுரை
157. யா/பரு/ 5614 திரு. கணபதி நமசிவாயம்
158. யா/பரு/ 5617 திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம்
159. யா/பரு/ 5664 திருமதி. முத்தம்மா பிரான்சிஸ்கோ
பிலிப்
160. யா/பரு/ 5719 திரு. மயில்வாகனம் விஜயரட்ணம்
161. யா/பரு/ 5724 திரு. குமாரசாமி கதிர்காமத்தம்பி
162. யா/பரு/ 5749 திரு. பொன்னம்பலம் தியாகராசா
163. யா/பரு/ 5750 திருமதி. மீனாட்சிப்பிள்ளை
தருமலிங்கம்
164. யா/பரு/ 5827 திரு. மாரிமுத்து இராசரெத்தினம்
165. யா/பரு/ 5853 திருமதி. கலாராணி வரதராசா
166. யா/பரு/ 5873 திருமதி. தெய்வானைக்கண்டு
கனகசபை
167. யா/பரு/ 5875 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
168. யா/பரு/ 5891 திரு. கதிரிப்பிள்ளை பொன்னையா
169. யா/பரு/ 6082 திரு. வாரித்தம்பி தங்கராசா
170. யா/பரு/ 6086 திரு. பாலசுப்பிரமணியம் சதாசிவம்
171. யா/புரு/ 6093 திருமதி. இரத்தினம் குகதாஸ்
172. யா/பரு/ 6102 திருமதி. கலைச்செல்வி
செல்வானந்தம்
173. யா/பரு/ 6137 திரு. அருணாசலம் இரத்தினசபாபதி
174. யா/பரு/ 6151 திரு. வேலும்மயிலும் சிவகுருநாதன்
175. யா/பரு/ 6167 திருமதி. பொன்னம்மா
பொன்னுத்துரை
176. யா/பரு/ 6186 திரு. கெங்காதரன் இளையதம்பி
177. யா/பரு/ 6195 திருமதி. நல்லம்மா நமசிவாயம்
178. யா/பரு/ 6218 திரு. மாதர் வேலும்மயிலும்
179. யா/பரு/ 6257 திருமதி. தையல்முத்து இராமசாமி
180. யா/பரு/ 6269 திரு. மயில்வாகனம்
வைத்தியலிங்கம்
181. யா/பரு/ 6318 திருமதி. நீலாதேவி நாராயணசாமி
182. யா/பரு/ 6354 திரு. நடராசா மோகனதாஸ்
183. யா/பரு/ 6361 திருமதி. ஜெயராணி செல்வலிங்கம்
184. யா/பரு/ 6375 திரு. செல்லத்துரை
புவனேஸ்வரராசா
185. யா/பரு/ 6467 திரு. வீரகத்தி கிருஷ்ணபிள்ளை
186. யா/பரு/ 6534 செல்வி. மகிழினி
சரவணபவானந்தன்
187. யா/பரு/ 6539 திருமதி. சுபாசினி கிருஷ்ணகுரு
188. யா/பரு/ 6540 திரு. கணபதிப்பிள்ளை சதாசிவம்
189. யா/பரு/ 6557 திரு. இரத்தினசிங்கம் இராமமூர்த்தி
190. யா/பரு/ 6695 திருமதி. பாக்கியலட்சுமி
கிருஷ்ணபிள்ளை
191. யா/பரு/ 6747 திரு. பொன்னுத்துரை
இரத்தினசிங்கம்
192. யா/பரு/ 6812 திரு. வேலப்பர் முருகேசு
193. யா/பரு/ 6816 திரு. சின்னையா தியாகராசா
194. யா/பரு/ 6863 திருமதி. சிவகாமிப்பிள்ளை
கந்தையா
195. யா/பரு/ 6872 திருமதி. சின்னம்மா சுப்பிரமணியம்

## வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு

1.யா/வ.கி/ 70 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
2.யா/வ.கி/ 122 திரு. கந்தையா சிவஞானம்
3.யா/வ.கி/ 175 திரு. வேலுப்பிள்ளை ஐயம்பிள்ளை
4.யா/வ.கி/ 193 திரு. இராசையா ஜீவரட்ணம்
5.யா/வ.கி/ 205 திரு. சபாபதிப்பிள்ளை
வீரகத்திப்பிள்ளை
6.யா/வ.கி/ 222 திரு. மரியாம்பிள்ளை
றூபேட்மரியதாஸ்
7. யா/வ.கி/ 292 திரு. செபமாலை இராயப்பு
8. யா/வ.கி/ 510 திரு. முருகேசு கணபதிப்பிள்ளை
9. யா/வ.கி/ 544 திரு. நடராசா ஜெயராசா
10. யா/வ.கி/556 திரு. கபிரிகேல் ஆசீர்பாதம்
11. யா/வ.கி/557 திரு. தேவசகாயம் திரேஸ்புஸ்பம்
12. யா/வ.கி/570 திரு. சந்தியாப்பிள்ளை கஸ்மீர்
13. யா/வ.கி/658 திரு. சின்னத்தம்பி குலசிங்கம்
14. யா/வ.கி/722 திருமதி. மேரிமெக்டனிக்
ஆனந்தராஜா
15. யா/வ.கி/823 திரு. முருகேசு சதாசிவம்
வல்லிபுரநாதர்
16. யா/வ.கி/ 864 திரு. சின்னத்தம்பி வீரசிங்கம்
17. யா/வ.கி/ 891 திரு. மயில்வாகனம் திருநாமம்
18. யா/வ.கி/ 939 செல்வி. அன்னலட்சுமி கந்தசாமி
19. யா/வ.கி/ 971 திருமதி. றோஸ்மேரிறெயினா
எட்வேட்அரியநாயகம்
20. யா/வ.கி/ 1005 திரு. சின்னர் கணபதிப்பிள்ளை
21. யா/வ.கி/ 1009 திருமதி. ஜெயராணி சௌந்தரராசா
22. யா/வ.கி/ 1022 திரு. சபாபதிப்பிள்ளை முத்தையா
23. யா/வ.கி/ 1075 திரு. சிற்றம்பலம் பரமசிவம்
24. யா/வ.கி/ 1084 திரு. மயில்வாகனம் பசுபதி
25. யா/வ.கி/ 1089 திரு. பாக்கியநாதன் புவனேந்திரன்
26. யா/வ.கி/ 1104 திரு. கணபதிப்பிள்ளை வடிவேலு
27. யா/வ.கி/ 1159 திரு. சின்னையா கதிர்காமு
28. யா/வ.கி/ 1217 திருமதி. அந்தோனியாமரியா[illegible]டா
ஜெயசீலன்
29. யா/வ.கி/ 1243 திரு. முருகேசு வினாசித்தம்பி
30. யா/வ.கி/ 1421 திரு. தம்பையா நாகமுத்து

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/சா/ 86 திரு. சுந்தரம் நடராசா
2. யா/சா/ 146 திரு. சரவணமுத்து சங்கரப்பிள்ளை
3. யா/சா/ 159 செல்வி. கலாநிதி சுப்பிரமணியம்
4. யா/சா/ 171 திரு. சரவணமுத்து இராசஇரத்தினம்
5. யா/சா/ 178 திரு. செல்லப்பா சுப்பிரமணியம்
6. யா/சா/ 235 திரு. காசிநாதர் சின்னத்தம்பி
7. யா/சா/ 347 திரு. சோமசுந்தரம் விக்னேஸ்வரன்
8. யா/சா/ 444 திரு. சங்கரப்பிள்ளை இராசரத்தினம்
9. யா/சா/ 515 திரு. செல்லப்பா தங்கராசா
10. யா/சா/ 557 திரு. கந்தையா டானியல்
சச்சிதானந்தம்
11. யா/சா/ 567 திரு. கந்தையா டானியல்
சச்சிதானந்தம்
12. யா/சா/ 583 திருமதி. நாகமுத்து சடாசிவம்
13. யா/சா/ 682 திரு. முத்தையா பொன்னுத்துரை
14. யா/சா/ 762 திரு. அருளம்பலம் சிவசிங்கம்
15. யா/சா/ 764 திருமதி. பூரணம் வயித்தி
16. யா/சா/ 780 திருமதி. நல்லம்மா கந்தசாமி
17. யா/சா/ 782 திரு. தம்பிராசா கதிர்காமநாதன்
18. யா/சா/ 808 திருமதி. நல்லம்மா முருகேசு
19. யா/சா/ 809 திரு. சின்னத்தம்பி தளையசிங்கம்
20. யா/சா/ 811 திருமதி. பொன்னம்மா சுப்பையா
21. யா/சா/ 939 திருமதி. கலாவல்லி உருத்திரன்
22. யா/சா/ 1126 திரு. நாகமுத்து சின்னத்துரை
23. யா/சா/ 1130 திரு. நாகமுத்து செல்லத்துரை
24. யா/சா/ 1145 திரு. வைத்திலிங்கம் சரவணமுத்து
25. யா/சா/ 1152 திரு. சின்னட்டி கந்தன்
26. யா/சா/ 1161 திரு. நல்லதம்பி கந்தையா
27. யா/சா/ 1180 திருமதி. புஸ்பவதி இராசதுரை
28. யா/சா/ 1204 திருமதி. சிவனேஸ்வரி
விசாகரத்தினம்
29. யா/சா/ 1217 திரு. சரவணமுத்து செல்லப்பா
30. யா/சா/ 1225 திரு. கந்தையா கனகசபாபதி
31. யா/சா/ 1244 திரு. சங்கரப்பிள்ளை யோகநாதன்
32. யா/சா/ 1287 திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
33. யா/சா/ 1317 திரு. கணபதிப்பிள்ளை
வேலுப்பிள்ளை
34. யா/சா/ 1386 திரு. சரவணமுத்து கைலாயநாதன்
35. யா/சா/ 1393 திரு. தில்லையம்பலம் சரவணமுத்து
36. யா/சா/ 1482 திரு. தம்பு சின்னையா
37. யா/சா/ 1489 திரு. துரையப்பா சோதிலிங்கம்
38. யா/சா/ 1516 திரு. வல்லிபுரம் சிவப்பிரகாசம்
39. யா/சா/ 1519 திரு. வீரகத்தி மாணிக்கவாசகர்
40. யா/சா/ 1574 திரு. சந்திரசேகரம் நடேசபிள்ளை
41. யா/சா/ 1582 திரு. ஞானசெல்வம் கிரிஸ்ரி
பிரேமகுமார்
42. யா/சா/ 1678 திருமதி. தங்கம்மா ஆறுமுகம்
43. யா/சா/ 1684 திருமதி. தங்கரத்தினம் சதாசிவம்
44. யா/சா/ 1686 செல்வி. நளாயினி குமாரசாமி
45. யா/சா/ 1705 செல்வி. பிறேமாதேவி முருகேசு
46. யா/சா/ 1706 திரு. பத்மநாதன் கிரிதரன்
47. யா/சா/ 1708 திரு. சுப்பையா இளையதம்பி
48. யா/சா/ 1767 திரு. அம்பலவாணர் சுப்பிரமணியம்
49. யா/சா/ 1800 திரு. கதிரேசு கந்தசாமி
50. யா/சா/ 1841 திரு. சின்னத்தம்பி பண்டாரம்
51. யா/சா/ 2057 திரு. சுப்பையா துரைசிங்கம்
52. யா/சா/ 2090 திரு. சபாபதிப்பிள்ளை குமரையா
53. யா/சா/ 2094 திரு. இராசையா ரவீந்திரன்
54. யா/சா/ 2106 திரு. இளையப்பா சபாநாதன்
55. யா/சா/ 2142 திரு. சுப்பையா முருகேசு
56. யா/சா/ 2171 திரு. நல்லதம்பி தர்மராசா
57. யா/சா/ 2227 திரு. இராசையா முருகையா
58. யா/சா/ 2237 திரு. வல்லிபுரம் நடராசா
59. யா/சா/ 2448 திரு. வேலுப்பிள்ளை வதனதீசன்
60. யா/சா/ 2461 செல்வி. ராஜினி சண்முகநாதன்
61. யா/சா/ 2551 திருமதி. சியாமளா கந்தசாமி
62. யா/சா/ 2555 திரு. காசித்தம்பி கதிரேசு
63. யா/சா/ 2567 திரு. கந்தையா சரவணமுத்து
64. யா/சா/ 2683 திரு. வைத்திலிங்கம் சின்னத்தம்பி
65. யா/சா/ 2714 திரு. சின்னக்குட்டி இராசன்
66. யா/சா/ 2755 திரு. சுந்தரம் சின்னத்தம்பி
67. யா/சா/ 2779 திருமதி. வள்ளிப்பிள்ளை
சின்னத்துரை
68. யா/சா/ 2798 திரு. சின்னையா கந்தசாமி
69. யா/சா/ 2820 திரு. சின்னவர் கந்தையா
70. யா/சா/ 2836 திரு. கணபதி செல்லன்
71. யா/சா/ 3024 திரு. வல்லிபுரம் நாகலிங்கம்
72. யா/சா/ 3073 திரு. நல்லதம்பி சுவாமிநாதன்
73. யா/சா/ 3093 திரு. வேலுப்பிள்ளை துரைராசா
74. யா/சா/ 3158 திருமதி. இராசநாயகி நவரத்தினம்
75. யா/சா/ 3185 திருமதி. இராஜேஸ்வரி சிவநாதன்
76. யா/சா/ 3211 திரு. முதலித்தம்பி செல்லத்துரை
77. யா/சா/ 3223 திரு. முருகேசு கணபதிப்பிள்ளை
78. யா/சா/ 3225 திருமதி. நீலாம்பிகை பாலசிங்கம்
79. யா/சா/ 3261 திரு. சின்னப்பு காங்கேஸ்
குலசேகரம்
80. யா/சா/ 3325 திரு. தம்பு இராமலிங்கம்
81. யா/சா/ 3327 திரு. கனகர் செல்லையா
82. யா/சா/ 3329 திரு. கதிரவேலு ஐயாத்துரை
83. யா/சா/ 3394 திரு. வைத்திலிங்கம் நடராசா
84. யா/சா/ 3395 திரு. செல்லையா கதிர்காமு
85. யா/சா/ 3435 திருமதி. நல்லம்மா மயில்வாகனம்
86. யா/சா/ 3437 திரு. கந்தையா ஆறுமுகம்
87. யா/சா/ 3512 திரு. வினாசித்தம்பி தம்பிப்பிள்ளை
88. யா/சா/ 3535 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
89. யா/சா/ 3552 திரு. இளையதம்பி முருகுப்பிள்ளை
90. யா/சா/ 3614 திரு. வாரித்தம்பி சிதம்பரப்பிள்ளை
91. யா/சா/ 3659 திரு. சின்னக்குட்டி தம்பு
92. யா/சா/ 3662 திரு. பெரியதம்பி மயில்வாகனம்
93. யா/சா/ 3716 திருமதி. மங்கையர்க்கரசி துரைராசா
94. யா/சா/ 3776 திரு. கணபதிப்பிள்ளை குமாரலிங்கம்
95. யா/சா/ 4124 திரு. ஆழ்வான் சின்னத்துரை
96. யா/சா/ 4149 திருமதி. தங்கேஸ்வரி இராமநாதன்
97. யா/சா/ 4247 திரு. வேலன் செல்வராசா
98. யா/சா/ 4286 திரு. கந்தர் தம்பிப்பிள்ளை
ஞானப்பிரகாசம்
99. யா/சா/ 4298 திரு. ஆறுமுகம் யோகராசா
100 .யா/சா/ 4313 திரு. சின்னையா கார்த்திகேசு
101 .யா/சா/ 4377 திரு. சின்னையா செல்லத்துரை
102 .யா/சா/ 4456 செல்வி. சிவகௌரி செல்லையா
103 .யா/சா/ 4514 திரு. சரவணமுத்து சுப்பிரமணியம்
104 .யா/சா/ 4632 திருமதி. சின்னப்பிள்ளை வயிரன்
105. யா/சா/ 4648 திரு. வீரசிங்கம் விக்கினேஸ்வரன்
106. யா/சா/ 4783 திரு. அம்பலவாணர் நமசிவாயம்
107. யா/சா/ 4785 திரு. தம்பையா பாலேந்திரன்
108. யா/சா/ 4812 திரு. பத்தலோமை யோசேப்
109. யா/சா/ 4832 திரு. பேதுறுப்பிள்ளை
செபஸ்தியாம்பிள்ளை
110. யா/சா/ 5078 திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம்
111. யா/சா/ 5188 திரு. விஸ்வநாதக்குருக்கள்
வேதமணவாளன்
112. யா/சா/ 5217 திரு. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை
113. யா/சா/ 5219 திருமதி. பூரணம் கனகசபை
114. யா/சா/ 5229 திரு. தம்பு ஆறுமுகம்
115. யா/சா/ 5269 திரு. தாமு கணபதிப்பிள்ளை
116. யா/சா/ 5381 திரு. காத்திப்பிள்ளை கனகசபை
117. யா/சா/ 5396 திரு. சண்முகம் சரவணமுத்து
118. யா/சா/ 5410 திரு. சண்முகம் சரவணமுத்து
119. யா/சா/ 5433 திரு. சின்னத்தம்பி இராமலிங்கம்
120. யா/சா/ 5477 திரு. தியாகராசா சூரியகுமார்
121. யா/சா/ 5480 திரு. உடையாபிள்ளை
திருநாவுக்கரசு
122. யா/சா/ 5518 செல்வி. சத்தியவதனி கந்தையா
123. யா/சா/ 5575 திரு. சின்னத்தம்பி முருகேசு
124. யா/சா/ 5589 திரு. சின்னத்தம்பி இராசேந்திரம
125. யா/சா/ 5595 திரு. வீரகத்தி நடராசா
126. யா/சா/ 5597 திரு. வேலுப்பிள்ளை கனகலிங்கம்
127. யா/சா/ 5599 திரு. மருதன் கதிரவேலன்
128. யா/சா/ 5785 திருமதி. சின்னாச்சிப்பிள்ளை
கிருட்டினர்
129. யா/சா/ 5944 திரு. கணபதி வேலுப்பிள்ளை
130. யா/சா/ 5964 திரு. டானியல் ஜேம்ஸ்
பொன்னுத்துரை
131. யா/சா/ 6007 திரு. ஸ்ரீவின் நல்லையா நவரட்ணம்
132. யா/சா/ 6058 திரு. கதிரன் சிலம்பு
133. யா/சா/ 6153 திரு. சின்னப்பு தாமோதரம்பிள்ளை
134. யா/சா/ 6170 திரு. கணபதிப்பிள்ளை
உமாமகேஸ்வரன்
135. யா/சா/ 6185 திரு. கணபதிப்பிள்ளை
வீரகத்திப்பிள்ளை
136. யா/சா/ 6247 திரு. குமாரசாமி கிருஸ்ணசாமி
137. யா/சா/ 6289 திரு. சின்னத்தம்பி படைவீரசிங்கம்
138. யா/சா/ 6375 திருமதி. சுந்தராம்பாள் சோமசுந்தரம்
139. யா/சா/ 6490 திரு. தருமலிங்கம் பாலசுப்பிரமணியம்
140. யா/சா/ 6502 திரு. இளையவன் கந்தையா
141. யா/சா/ 6610 திருமதி. சின்னக்குட்டி கந்தன்
142. யா/சா/ 6652 திரு. சுப்பன் கணபதி
143. யா/சா/ 6698 திருமதி. சின்னம்மா நமசிவாயம்
144. யா/சா/ 6717 திரு. தளையசிங்கம் அகத்தியர்
145. யா/சா/ 6726 திரு. ஜோசப்ராசநாயகம்
ஞானப்பிரகாசம்
146. யா/சா/ 6746 திரு. வெற்றிவேலு சிவப்பிரகாசம்
147. யா/சா/ 6785 திரு. அப்பாக்குட்டி
தாமோதரம்பிள்ளை
148. யா/சா/ 6822 திரு. கந்தையா தில்லையம்பலம்
149. யா/சா/ 6880 திரு. மாதன் தம்பையா
150. யா/சா/ 6887 திரு. பாலசிங்கம் பாலதாஸ்
151. யா/சா/ 6938 திருமதி. பரிமளம் கணபதிப்பிள்ளை
152. யா/சா/ 6945 திரு. முருகேசு சரவணமுத்து
153. யா/சா/ 6985 திரு. கந்தையா ஆறுமுகம்
154. யா/சா/ 6999 திரு. செல்லத்துரை ஆனந்தராசா
155. யா/சா/ 7054 திருமதி. பொன்னம்மா தம்பிராசா
156. யா/சா/ 7148 திரு. பொன்னன் சிங்கராசா
157. யா/சா/ 7155 திருமதி. சீதா கருணாகரன்
158. யா/சா/ 7198 திரு. வேலுப்பிள்ளை இரத்தினம்
159. யா/சா/ 7263 திருமதி. தங்கம்மா ஐயாத்துரை
160. யா/சா/ 7273 திரு. கதிராமு கந்தையா
161. யா/சா/ 7301 திருமதி. அன்னம்மா
பாலசுப்பிரமணியம்
162. யா/சா/ 7346 திரு. காசிநாதர் சுப்பிரமணியம்
163. யா/சா/ 7369 திரு. வயிரவன் செல்லன்
164. யா/சா/ 7397 திருமதி. புவனேஸ்வரி சின்னத்தம்பி
165. யா/சா/ 7465 திரு. நடுவிலான் வைரவன்
166. யா/சா/ 7467 திரு. முத்தர் தம்பையா
167. யா/சா/ 7578 திரு. சின்னத்தம்பி சிவராசா
168. யா/சா/ 7601 திரு. சின்னையா கந்தையா
169. யா/சா/ 7605 திரு. அப்பாச்சாமிகுருக்கள்
விசுவநாதஐயர்
170. யா/சா/ 7620 திரு. வைத்திலிங்கம் நடராசா
171. யா/சா/ 7643 திரு. கைலாயப்பிள்ளை
சிவலிங்கராசா
172. யா/சா/ 7647 செல்வி. யசோதா அப்பாத்துரை
173. யா/சா/ 7652 திரு. கந்தர் காசிநாதர்
174. யா/சா/ 7676 திரு. சின்னத்தம்பி தம்பையா
175. யா/சா/ 7695 திருமதி. பூரணம் சின்னத்துரை
176. யா/சா/ 7717 திரு. பழனி மகாதேவன்
177. யா/சா/ 7738 திரு. வீரசிங்கம் இளையதம்பி
178. யா/சா/ 7765 திரு. சீனிக்குட்டி செல்லப்பா
179. யா/சா/ 7797 திருமதி. பொன்னம்மா ஐயாத்துரை
180. யா/சா/ 7803 திரு. சிதம்பரப்பிள்ளை
சிவசுப்பிரமணியம்
181. யா/சா/ 7882 திரு. தம்பு சிதம்பரப்பிள்ளை
182. யா/சா/ 7883 திரு. மூத்ததம்பி சண்முகம்
183. யா/சா/ 7886 திரு. சின்னப்பு சுப்பிரமணியம்
184. யா/சா/ 7907 செல்வி. பரமேஸ்வரி சுந்தரம்
185. யா/சா/ 7942 திரு. சுவாமிநாதர் சிவப்பிரகாசம்
186. யா/சா/ 7953 திரு. வல்லிபுரம் நாகமுத்து
187. யா/சா/ 7955 திரு. சரவணமுத்து மகாலிங்கசிவம்
188. யா/சா/ 7964 திரு. இரத்தினம் ஜெகநேசன்
189. யா/சா/ 7970 திரு. முருகேசு சண்முகநாதன்
190. யா/சா/ 7979 திரு. நமசிவாயம் வைரமுத்து
191. யா/சா/ 8016 திருமதி. தங்கமுத்து சிவசம்பு
192. யா/சா/ 8056 திருமதி. சிவகாமி கந்தையா
193. யா/சா/ 8097 செல்வி. கமலாட்சி சரவணமுத்து
194. யா/சா/ 8099 திருமதி. அன்னபூரணம் தியாகராசா
195. யா/சா/ 8121 திரு. சின்னப்பா சுப்பு
196. யா/சா/ 8255 திருமதி. சங்கரப்பிள்ளை நல்லதம்பி
197. யா/சா/ 8261 திருமதி. லில்லி பாக்கியநாதன்
198. யா/சா/ 8300 திரு. சின்னத்தம்பி தியாகராசா
199. யா/சா/ 8307 திரு. வேலுப்பிள்ளை கந்தையா

(மிகுதி நாளை)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## சூட்டுக் காயத்துடன் இளைஞர் அனுமதி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சூட்டுக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பெற்றுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவரின் பெயர் வைத்தியசாலைப் பதிவுப் புத்தகத்தில் இன்பப்பிரியன் எனப்பதியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் 12 மணிக்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவரது வலதுகாலில் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட நபர் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவருக்கு பொலிசார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

### குழியில்...

முன்தினம் நண்பகலிலிருந்து மேற்கொள்ளப்பட்ட போதிலும் நேற்று அதிகாலை 2 மணியளவில் சுமார் 13 மணிநேர முயற்சியின் பின் வெளியே எடுக்கப்பட்டது.

அந்தக் கிடங்கு தோண்டப்பட்ட இடத்தின் அடியில் சகதி காணப்பட்டதில் குழாய்க்கிணறு அமைத்த இடத்திலிருந்து மண்ணிற்கு அடியில் சற்றுத் தூரம் தள்ளியே சடலம் மீட்கப்பட்டிருக்கிறது. நிலத்துக்கு அடியில் சகதி காணப்பட்டதால் சடலம் குறித்த இடத்திலிருந்து இழுத்துச் செல்லப் பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### சமாதான...

தத் திட்டமிட்டுள்ளார். ஆனால், ஜே.வி.பியினருடனான சந்திப்புக்குறித்து இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரியவருகிறது.

அரச மற்றும் புலிகள் தரப்புக்களுடனான பேச்சுக்களின்போது எரிக் சொல்ஹெய்ம் கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமை மற்றும் ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்துள்ள தேசிய ஆலோசனை சபை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் கவனம் செலுத்துவார் எனத் தெரியவருகிறது.

## இலங்கை கடற்படைக்கு...

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே இந்த உறுதிமொழியை வழங்கினார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு வந்த அட்மிரல் அருண்பிரகாஷ், நேற்று கடற்படைத் தலைமையகத்துக்கு விஜயம் செய்தபோது, அங்கு அவருக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

பின்னர் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியுடன் இரு நாட்டுக் கடற்படைகளினதும் நடவடிக்கைகள் குறித்து விரிவான பேச்சு நடத்தினார்.

இதன்போது, இலங்கைக் கடற்படைகளுக்கு இந்தியக் கடற்படையின் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

இதேவேளை, அட்மிரல் அருண்பிரகாஷ் - நேற்று, ஜனாதிபதி சந்திரிகாவையும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சுக்கு விஜயம் செய்து, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை இந்தியக் கடற்படைத் தளபதி சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

இந்தியாவின் நெருங்கிய நாடான இலங்கையின் கடற்படை மற்றும் படைகளுடன் புதிய பரப்புக்களில் கூட்டுறவை வலுப்படுத்துவது பற்றிப் பேசியதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் நேற்றுக்காலை இராணுவத் தலைமையகத்துக்கு விஜயம் செய்தார்.

அங்கு அவரை வரவேற்ற பதில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ.எம்.சி.டபிள்யூ.பி.செனவிரத்ன, பேச்சுக்களை நடத்தினார். இராணுவத்தினரின் அணிவகுப்பு மரியாதையும் அவருக்கு வழங்கப்பட்டது.

இந்தியக் கடற்படைத் தளபதி இன்று திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்கு விஜயம் செய்யவுள்ளார். திருமலைத் துறைமுகப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயவுள்ள இவர், அனுராதபுரம் சிறிமாபோதி, கண்டி தலதாமாளிகை, கொழும்பு கடற்படைத் தளம் ஆகியவற்றுக்கும் விஜயங்களை மேற்கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### தம்பு நாகரட்ணம்

அன்னார் நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாவும் உயரப்புலம் ஆனைக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பப்பா என்று அழைக்கப்படும் தம்பு நாகரட்ணம் 13.09.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் 14.09.2004 மாலை 3 மணிக்கு ஆனையூர் அடைக்கலநாயகி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
நந்தகுமார் (மகன்)

# ஆயுதங்களை அபகரிக்கமுயன்ற ராணுவ அதிகாரி சூட்டுக்குப் பலி!

## திருகோணமலை - கந்தளாயில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை - கந்தளாயிலுள்ள ஊர்காவற்படையினரின் காவலரணுக்குள் நகர்ந்து ஆயுதங்களை அபகரிக்க முயன்ற பாதாள உலகக் குழுவினர்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இராணுவ லெப்ரினன்ட் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருகோணமலை - கொழும்பு வீதியில் கந்தளாய் 92 ஆம் மைல் கல்லில் உள்ள முள்ளிப்பொத்தான் ஊர்காவற்படை காவலரணுக்குள் வான் ஒன்றில் வந்த ஆயுதபாணிகள் திடீரென அங்கிருந்த ஆயுதங்களை அபகரிக்க முயன்றனர்.

இதன்போது ஆயுதபாணிகளான பாதாள உலகக் குழுவினர் மீது பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த ஊர்காவற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதையடுத்து இருதரப்பினருக்குமிடையே மோதல் ஏற்பட்டதில் ஆயுதங்ளை அபகரிக்க முயன்ற பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். ஏனையோர் திருகோணமலை நோக்கித் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் கந்தளாய் சீனித் தொழிற்சாலை இராணுவ முகாமைச் சேர்ந்த லெப்ரினன்ட் மங்கள ரத்னாயக்க என்ற இராணுவ அதிகாரியென பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்தது.

இவர் பேலியகொடவைச் சேர்ந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர். காயமடைந்த இரண்டு ஊர்காவல் படையினரும் குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்சென்ற குழுவினரைக் கண்டுபிடிக்க பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் நேற்றுக் காலை - தாக்குதல் நடத்தியோர் வந்த வாகனம் மீட்கப்பட்டது.

கந்தளாய் சர்வோதய நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போது இந்த வாகனம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் கந்தளாய் சீனித் தொழிற்சாலை இராணுவ முகாமில் கடமையாற்றும் இரண்டாம் லெப்ரினன்ட் ஜெயக்கொடி என்ற இராணுவ அதிகாரியும், ஏனைய இருவரும் சர்வோதய ஊழியர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்ட பாதாள உலகக் குழுவினரே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகவும், இவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (04)

## முகமாலை, ஓமந்தை..

உலகசந்தையில் எண்ணெயின் விலை அதிகரித்ததாலேயே நாட்டில் எரிபொருட்களின் விலை அதிகரித்தது.

முன்னைய அரசாங்கம் மீளக் குடியமர்ந்தோரில் 25 ஆயிரம் கொடுப்பனவு வழங்கியவர்களுக்கு ஒரு வருடத்துக்கு உலர்உணவு நிவாரணம் வழங்கத் தீர்மானித்தபோதும், எமது அரசாங்கம் நிவாரணம் வழங்கும் காலத்தை மேலும் 5 மாதங்களால் அதிகரித்துள்ளது.

அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து இத்திட்டம், சமுர்த்தித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும். இதுவரை நிவாரணம் வழங்க ஒதுக்கப்பட்ட நிதி, யாழ்.குடாநாட்டு மக்களின் நலனுக்காகவே பயன்படும்.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகளின் செயலகங்கள் தமக்குள் தொடர்புகளைத் தொடர்ந்தும் பேணி வருகின்றன. கடந்த ஏப்ரல் மாதத்தில் தடைப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இதிலிருந்து பேச்சுக்களின் கடினத்தன்மையைப் புரிந்துகொள்ள முடிகிறது. எவ்வாறாயினும் அரச சமாதானச் செயலகம் சமாதானத்தை முன்னெடுப்பதில் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறது.

இடைக்காலத் திட்டவரைவு குறித்து அமைச்சர்களுடன் அரச சமாதானச் செயலகம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

இந்தியாவில் வசித்துவரும் இலங்கை அகதிகள், பணம் செலுத்தி தனிநபர்கள் ஊடாக நாட்டுக்குத் திரும்புகின்றமை உயிராபத்தை ஏற்படுத்தும். தற்போது இந்தியாவிலிருந்து 5 ஆயிரம்பேரை இலங்கைக்கு அழைத்துவர யு.என்.எச்.சி.ஆர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தத் தொகையை இரண்டு மடங்காக அதிகரிக்குமாறு யு.என்.எச்.சி.ஆரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். அறுபதாயிரம் அகதிகள் இந்தியாவில் உள்ளனர்.

இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கிவருகின்ற இலங்கை அகதிகளை நாம் வரவேற்கின்றோம். இலங்கை வரும் அகதிகளை விமானம் மூலம் கொண்டுவரவும், அவர்களின் பொருட்களை கப்பல் மூலம் கொண்டுவரவும் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அதிகளவு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆசிரியர் நியமனம், வைத்தியர் - தாதிமார் நியமனம், வீடமைப்பு, கண்ணிவெடிகள் அகற்றும் செயற்பாடுகள் என்பன இவற்றுள் அடங்குகின்றன.

குடாநாட்டில் பாலங்களைப் புனரமைக்கும் செயற்திட்டம் பெரும்பாலும் இந்த வருடத்துக்குள் பூர்த்தியாகும். மழை காரணமாக வருட இறுதியில் பாலங்கள் புனரமைக்கும் பணி ஸ்தம்பிதமடைந்தால், அடுத்த வருட ஆரம்பத்தில் அந்த நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகும்.

தற்போது யாழ்.குடாநாட்டில் 800 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. யாழ்.குடாநாட்டு நீர்முகாமைத்துவம் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை புனரமைப்புப் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட்டு, விரைவில் திறந்து வைக்கப்படும். எமது முக்கிய நோக்கம் வட கிழககு மாகாண மக்கள் மத்தியில் சுமுகமான ஓர்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதே என்று ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

### நல்லைக் கந்தன்...

தேர்த்திருவிழாவை முன்னிட்டு, ஆலயச் சூழலெங்கும் பக்திமயமான காட்சிகளும், அலங்காரங்களும் காணப்பட்டன.

ஆலய வீதியெங்கும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மட்டுமன்றி வெளியிடங்களிலிருந்தும் லடசககணக்கான அடியார்கள் திரண்டுவந்து நல்லைக் கந்தனின் இரதோற்சவத்தில் கலந்துகொண்டனர். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் மக்களும் பெருமளவில் நல்லைக் கந்தனின் இரதோற்சவத்தைக் காண வருகைதந்திருந்தனர்.

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் காவடி, தூக்குக் காவடி, கற்பூரச்சட்டி எடுத்தல், பால் குடம் எடுத்தல் மற்றும் தேரைத் தொடர்ந்து அங்கப்பிரதட்சனை செய்தல், அடியழித்தல் முதலான நிவர்த்திக் கடன்களை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வுகளை உள்ளூர், வெளியூர் ஒலி, ஒளி ஊடகங்கள் பல நேரடிவர்ணனை செய்ததும் குறிப்பிடத்தக்கது. (ப)

### தியாகி லெப்...

கல்விக்கூடங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், பாடசாலைகள், திணைக்களங்கள், பொதுஅமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள், வாணிப நிறுவனங்கள், பொது இடங்கள் போன்றவற்றில் நிகழ்வுகள் நடைபெற தேசிய எழுச்சிப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

அனைத்துத் துறைசார்ந்த அமைப்புக்களும் தங்கள் தங்கள் இடங்களில் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரித்து நினைவுப் பந்தல் அமைத்து தியாகி திலீபன் நினைவுத் திருவுருவப் படத்தை வைத்து நிகழ்வுகளை அனுஷ்டிக்குமாறு கோரப்பட்டுள்ளது. அதேவேளை, தமிழ் மக்கள் தத்தமது வீடுகளிலும் திலீபனின் திருவுருவப் படத்தை வைத்து வணக்கம் செலுத்தவும் கோட்ட, பிரதேச ரீதியான நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்த நல்லைக் கந்தன் ஆலய வடக்கு வீதியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் காலை 9.55 இற்கு ஆரம்பமாகும். இறுதிநாள் நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, தியாகி திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவாக

1) வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், பார்வை குறைந்த மாணவருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்

2) இரத்ததானம், சிரமதானம் போன்ற பணிகளை மேற்கொள்ளல்.

3) பாடசாலை, கிராமம் தோறும் சுகாதார சமூக கருத்தரங்குகள் நடாத்துதல்.

4) பாடசாலை மட்டத்தில் திலீபன் நினைவுநாள் கட்டுரை, கவிதை, பொதுஅறிவு தொடர்பான போட்டிகள் நடாத்துதல்.

5) மகளிர் பணிக்கான வேலைத் திட்டங்கள், கூட்டுறவாளர் மத்தியிலான போட்டிகள் போன்ற பல்வேறு அம்சங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

என்றுமில்லாதவாறு இந்த ஆண்டு தியாகி திலீபன் 17 ஆவது ஆண்டு நினைவு நாட்களை நினைவுகூர தேசிய எழுச்சிப்பேரவை நடவடிக்கை எடுத்துள்ளதென ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.